# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் லெவெல் 3 மற்றும் 4

**B** தொடர்

பாடங்கள் 7 - 12

www.besweb.com

# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியில்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேஷமாக ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் **A** 4 லும் சில பகுதிகளில் **A** 5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடையகருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் “நாம் கற்றுக்கொள்வது” என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

**அறிமுகப்படுத்தவும்:** ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

**கற்றுக்கொடுக்கவும்:** ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

**கற்றுக்கொள்ளவும்:** ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

**செய்து முடிக்கவும்:** ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிகூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

**நினைவில் கொள்ளவும்:** எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

## முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

“சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்”

## பைபிள்டைம் பாடத்திட்டம்

| | நிலை 0 (பள்ளி செல்லுமுன்)<br>நிலை 1 (வயது 1-7)<br>நிலை 2 (வயது 8-10) | நிலை 3 (வயது 11-13) | நிலை 4 (வயது 14+) |
|---|---|---|---|
| தொடக்க பாடங்கள் | 1.தொடக்கபாடம்-அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி |
| A தொடர் | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு & வீழ்ச்சி<br>2. ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| B தொடர் | 1. கிறிஸ்துவின்ஆரம்பகால வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. நற்செய்தி எழுத்தாளர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானி<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபு & அவரது குடும்பம்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர் 2:42 - முன்னே உள்ள வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம<br>12.கிறிஸ்துமஸ் கதை |
| C தொடர் | 1. தானியேல்<br>2. தொடரும் அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. தொடரும் அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசுவின் கூற்றுகள்<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. மேலும் பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

| | B7 - நிலை 3<br>பாடம் 1 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - எகிப்தில் ஒற்றர்கள் | B7 - நிலை 4<br>பாடம் 1 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - வாலிபவயதின் சோதனை |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதியாகமம் 41:46-57 42:1-26**<br>**முக்கிய வசனம்: எண்ணாகமம் 32: 23**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. நாம் பாவம் செய்து அதிலிருந்து தப்ப முடியாது.<br>2. கர்த்தராகிய இயேசு மட்டுமே கொடுக்கக்கூடிய மன்னிப்பைப் பெறுவதற்குமுன் நாம் நம்முடைய பாவத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். | **தியானப் பகுதி: ஆதி 39:1-23 40: 1-23**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 39: 21**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. யோசேப்பு சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை.<br>2. யோசேப்பின் அடிமைத்தனத்திலும் சோதனையிலும் சிறைவாசத்திலும் கர்த்தர் அவனோடு இருந்தார். யோசேப்பு கர்த்தரை நம்பிக் கீழ்ப்படிந்தான். |
| அறிமுகப்படுத்-துங்கள் | எகிப்தியர்கள் உணவுக்காக தங்கள் சொந்த பயிர்களை நம்பியிருந்ததையும்இ ஏழு வருட பஞ்சம் என்பது மக்களுக்கு மிகவும் கடுமையான சூழ்நிலை என்பதையும் மாணவர்களுக்கு விளக்குங்கள். சோளம் அந்த நாட்களில் மதிப்புமிக்கதாக இருந்ததுஇ ஏனெனில் இது எல்லாவற்றிலும் உணவாகப் பயன்படுத்தப்பட்டதுஇ அதை நீண்ட காலம் சேமித்துவைக்க முடியும். மேலும் இது பணமாகவும் கூடப் பயன்படுத்தப்பட்டது. நைல் நதியின் காரணமாக அண்டை நாடுகளை விட பஞ்ச காலங்களில் எகிப்து சிறந்து விளங்கியது என்பதை விளக்குங்கள். | போத்திபார் பார்வோனின் அரச காவலரின் தலைனாக இருந்தான்இ யோசேப்பு சில மீதியானிய அடிமை வர்த்தகர்களிடமிருந்து அவரது வீட்டில் வேலை செய்ய வாங்கப்பட்டான். யோசேப்பு மிகவும் திறமையான இளைஞன் என்பதுதான் போத்திபார் எடுத்ததிலேயே மிகச் சிறந்த முடிவு. போத்திபாரின் மனைவி பொய்யாக குற்றம் சாட்டி யோசேப்பை சிறையில் தள்ளினாள். சிறையில் இருந்தபோதுஇ கனவுகளின் காரியம் வந்தது; எல்லோருடைய கவனத்தையும் தேவன் மீது யோசேப்பு ஈர்த்தான்: |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>இந்த உவமையின் பயன்பாட்டை விளக்குங்கள்:<br>1. பஞ்சம் ஏழு ஆண்டுகள் நீடிக்கிறது (வசனம் 54) மேலும் பார்வோனின் களஞ்சியங்களில் இருந்த ஏராளமான சோளத்தை (55 வது வசனம்) யோசேப்பு மட்டுமே தேவைக்கேற்ப வழங்கமுடியம்.<br>2. பஞ்சம் காரணமாக யோசேப்பின் சகோதரர்கள் தானியதைத் தேடி எகிப்துக்கு வர வேண்டியிருந்தது. (42: 1-3)<br>3. யோசேப்பு தன் சகோதரர்களை அடையாளம் கண்டுகொண்டான்இ ஆனால் அவர்களோ அவனை அறியவில்லை. (42: 7) அவன் அவர்களை மூன்று நாட்கள் சிறையில் அடைத்தான்.<br>4. அவர்கள் தனக்கு எதிராக எப்படி பாவம் செய்தார்கள் என்பதை அவர்களே ஒப்புக்கொள்ளும் விதத்தில் யோசேப்பு தன் சகோதரர்களுடன் நடந்துகொண்டான். (42: 21) அப்போதுதான் அவர் அவர்களை மன்னிப்பான். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யோசேப்பு எகிப்தில் ஒரு அடிமையாக இருந்த சூழ்நிலையை சிறப்பாகப் பயன்படுத்திஇ விரைவிலேயே பார்வோனின் நம்பிக்கையைப் பெற்றான். (39: 2)<br>2. போத்திபாரின் மனைவி யோசேப்பு தன்னிடம் முறைகேடாக நடந்ததாக அவன்மீது பொய்யாக குற்றம் சாட்டினாள் (39: 11- 20) ஆயினும்இ யோசேப்பு ஒரு இளைஞன்இ எதுவாக இருந்தாலும் தேவன் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்து நேர்மையாக இருந்தான்இ இந்த சூழ்நிலையை மாற்றிஇ யோசேப்பை சிறை நிர்வாகியாக ஆக்குவதன் மூலம் தேவன் அவனை உயர்த்தினார். (39: 21-23)<br>3. தலைமை சமையல்காரனின் கனவிற்கு யோசேப்பு அளித்த விளக்கத்தைப்போலவே அவன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதால் அது ஒரு ஜீவ செய்தியாகும்இ ஆனால் ரொட்டிசுடுபவனின் கனவின் விளக்கம் மரணச் செய்தியாக இருந்ததுஇ அதில் ரொட்டிசுடுவோரின் தலைவன் தூக்கிலிடப்பட்டான். |
| மீள்பார்வை செய்யுங்கள் | முக்கிய வசனம் இந்தப் பாடத்தை எவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறது என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். | முக்கிய வசனம் எவ்வாறு கீழ் வரும் காரியங்களில் எவ்வாறு இப்பாடத்தைச் சுருக்கமாகக் கூறுகிறது என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்:<br>1. போத்திபாரின் வீட்டில் யோசேப்பின் வாழ்க்கை; |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. பாவத்துக்கு விடைகொடுத்துஇ மன்னிப்புக்காக கர்த்தராகிய இயேசுவிடம் திரும்புவதின் முக்கியத்துவம்.<br>3. பாடத்தில் இரட்சிப்பின் A B C ஐக் கவனியுங்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நாம் சோதனைக்கு இடங்கொடுக்கக்கூடாதுஇ ஆனால் அதைக் கடக்க நமக்கு உதவும்படி ஒவ்வொரு நாளும் தேவனிடம் கேட்க வேண்டும்.<br>2. பரிந்துரைக்கப்பட்ட கூடுதல் வாசிப்புகளைப் வாசியுங்கள், எபேசியர் 6: 13-17, யாக்கோபு 1: 12-18 |

| | B7 - நிலை 3<br>பாடம் 2 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - பெஞ்சமினும் துர்ச்செய்தியும்! | B7 - நிலை 4<br>பாடம் 2 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - பதவி உயர்வு பெற்றான் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதி 42:35-38; 43:11-14, 24-31;**<br>**முக்கிய வசனம்: எபேசியர் 4: 32**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. யோசேப்பை அடிமைத்தனத்திற்கு விற்க தனது சகோதரர்களுடன் சேர்ந்து கொண்ட யூதாஇ இப்போது பென்யமீனைக் காப்பாற்ற ஒரு அடிமையாக மாற முன்வருகிறான். (44: 33) | **தியானப் பகுதி: ஆதியாகமம் 41: 1-45**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 41: 38**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பார்வோன் யோசேப்பை 'தேவனுடைய ஆவியுள்ளவன்' (41: 38) என்று அங்கீகரித்ததைப் போலவேஇ உங்களை அறிந்தவர்கள் உங்கள் அன்பான செயல்களாலும்இ தெய்வீக வாழ்க்கை முறையினாலும் தேவனை உங்களில் காண முடியும். |
| அறிமுகப்படுத்-துங்கள் | யோசேப்பின் சகோதரர்களின் பாவம் அவர்களையேத் துன்பப்படுத்தியதோடுஇ அவர்களின் தந்தையான யாக்கோபுக்கும் மிகுந்த மன உளைச்சலைக் கொடுத்தது என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். பாவம் எவ்வாறு நம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை விளக்குங்கள். | பார்வோன் முன் ஆஜராகும்படி யோசேப்பு சிறையிலிருந்து அழைக்கப்பட்டான். தனது கனவைப் பற்றி அர்த்தம் சொல்ல தேவன் யோசேப்புக்குக் கொடுத்த திறமை பார்வோனை மிகவும் கவர்ந்ததுஇ அவன் யோசேப்பிற்கு 'பிரதமர்' என்ற உயர் பதவியை வழங்கினான்.<br>(ஆதியாகமம் 41: 41) கடினமான சூழ்நிலைகளில் யோசேப்பு தேவனுக்கு உண்மையுள்ளவனாக இருந்தான் (ஆய்வு 1) தேவனும் அவனுக்கு உண்மையுள்ளவராய் இருந்தார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பஞ்சம் தொடர்கிறதுஇ சகோதரர்கள் மீண்டும் உணவுக்காக எகிப்துக்குத் திரும்புகிறார்கள். பெஞ்சமினை எகிப்துக்கு அனுப்ப யாக்கோபு மிகவும் தயங்குகிறார். (43: 11) யோசேப்பு மட்டுமே அவர்களுடைய தேவையை பூர்த்திசெய்து அவர்களின் இக்கட்டான நிலைமையைப் போக்க முடிந்தது.<br>2. 2.சகோதரர்கள் அனைவரும் யோசேப்பின் வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கப்படுகிறார்கள்இ ஆனால் அவர்கள் அவனை அடையாளம் காணவில்லை. (43: 16)<br>3.. பயத்தோடு சகோதரர்கள் யோசேப்பு தனது அரண்மனையில் வழங்கிய விருந்தை உண்கிறார்கள். யோசேப்பு தனது தம்பி பெஞ்சமீனைப் பார்த்தபோது அழுகிறான். (43: 30)<br>4. அவன் தனது வெள்ளி கோப்பையை பெஞ்சமீன் சாக்கில் வைக்குமாறு கட்டளையிடுகிறான்இ பெஞ்சமீன் அதைத் திருடிவிட்டதாகவும்இ அவன் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறான். (44: 17) | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மந்திரவாதிகள் மற்றும் ஞானிகளால் பார்வோனின் கனவுகளுக்கு அர்த்தம் சொல்ல முடியவில்லைஇ ஆனால் தேவன் அதை யோசேப்புக்கு வெளிப்படுத்தியிருந்தார். (41: 8)<br>2. தேவனைப் பற்றிய யோசேப்பின் அறிவு அவன் கனவை விளக்குவதற்கு உதவியதுஇ மீண்டும் அவன் தேவனுக்கு கனத்தைச் செலுத்துகிறான். (41: 16)<br>3. ஏழு வருட பஞ்சத்தில் உயிர்ப் பிழைத்திருக்கும் திட்டத்தை யோசேப்பு பார்வோனுக்கு வழங்கினான்இ அதன்மூலம் எகிப்தில் பல உயிர்களையும்இ பல மைல் தொலைவில் உள்ள தனது சொந்த குடும்பத்தினரையும் காப்பாற்றினான். (41: 33-36)<br>4. யோசேப்பு உயர்த்தப்பட்டுஇ எகிப்து தேசத்தின் ஆட்சியாளராக்கப்படுகிறான். அவனுக்கு ஒரு புதிய பெயர் வழங்கப்பட்டதுஇ மேலும் அவன் எவ்வளவு உயர்ந்த மரியாதைக்குரியவன் என்பதைக் காண்பிப்பதற்காக ஒரு முக்கிய எகிப்திய அதிகாரியின் மகளும் அவனுக்கு மனைவியாக வழங்கப்பட்டாள். (41: 41-45) |
| மீள்பார்வை செய்யுங்கள் | மாணவர்களுக்கு இதை விளக்குங்கள்:<br>1.நம்முடைய பாவங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புக்காக 'ஆவிக்குரிய யோசேப்பு' ஆகிய கர்த்தராகிய இயேசுவிடம் வரும் வரை நம் வாழ்வில் ஒரு வெறுமை இருக்கிறது. | (1) கனவுஇ (2) அதன் அர்த்தம் மற்றும் (3) யோசேப்பின் பதவிஉயர்வு பற்றிய கேள்விகளை மாணவர்களிடம் கேளுங்கள்இ பாடம் 2 இல் உள்ள கேள்விகளுக்கு சரியாக பதிலளிக்க இவை உதவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. பாவம் துன்பத்தை ஏற்படுத்துகிறது என்பதைக் கவனியுங்கள்.<br>2. நாம் மனந்திரும்பிஇ நம்முடைய பாவங்களை அறிக்கைசெய்யும்போதுஇ கர்த்தராகிய இயேசு மன்னிக்கத் தயாராக இருக்கிறார். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. தேவனுக்கு கனத்தைச் செலுத்த யோசேப்பு எப்போதும் கவனமாக இருந்தான்இ நாமும் அதையே செய்ய கவனமாக இருக்க வேண்டும். நமக்காக கனத்தைப் பெறுவது தேவனின் கனத்தைத் திருடுவதாகும். |

| | B7 - நிலை 3<br>பாடம் 3 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - மன்னிப்பு மற்றும் நற்செய்தி! | B7 - நிலை 4<br>பாடம் 3 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - கரிசனையுள்ள நடத்தை |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதி 44:18-34; 45:1-14, 25-28**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 45: 9**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. யோசேப்பின் சகோதரர்கள் அவனை ஒழித்துக்கட்ட விரும்பினாலும்இ தேவன் அவர்கள் உயிரைப் பாதுகாக்கவும்இ எகிப்தைக் காப்பாற்றவும்இ இஸ்ரவேல் தேசத்தின் தொடக்கத்திற்கான வழியை ஆயத்தப்படுத்தவும் அவர்களின் தீய செயல்களைப் பயன்படுத்தினார். | **தியானப் பகுதி: ஆதியாகமம் 42, 43**<br>**முக்கிய வசனம்: ரோமர் 14: 11-12**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. யோசேப்பின் சகோதரர்கள் மன்னிக்கப்படுவதற்கு முன்பு அவர்கள் பார்க்கவும் செய்த பாவத்தைக் ஒப்புக்கொள்ளவும் கொண்டு வரப்பட வேண்டும்.<br>2. நாம் ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக வணங்கி, ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும் ஒரு நாள் வரப்போகிறது. |
| அறிமுகப்படுத்-துங்கள் | தன் சகோதரர்கள் உண்மையிலேயே வருந்துவதை யோசேப்பு கண்டபோதுஇ அவன் அவர்களிடம் தான் யார் என்பதை வெளிப்படுத்திஇ "நான் யோசேப்பு" என்றான். (ஆதியாகமம் 45: 4) 'பரலோக யோசேப்பாகியஇ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும்' தன்னை அவ்வாறு 'நான்' குறிப்பிட்டார் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள் | சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு யோசேப்பு கடைசியாக தனது சகோதரர்களைப் பார்த்தபோதுஇ அவர்கள் அவனை மீதியானிய வியாபாரிகளுக்கு இருபது வெள்ளிக்காசுக்கு அடிமையாக விற்றார்கள். அவர்கள் இன்னும் தீயவர்களாகவும் துரோகிகளாகவும் இருந்தார்களா அல்லது பல ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் மாறியிருக்கிறார்களா என்று யோசேப்பு யோசித்துக்கொண்டிருக்க வேண்டும். ஒரு சில சோதனைகள் வழியாக அவர்களைக் கடத்திவிட்டு அதன்மூலம் அதை அறிய முடிவு செய்தான்! |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. வெள்ளி கோப்பை யோசேப்பின் அதிகாரத்தின் அடையாளமாக இருந்ததுஇ அதைத் திருடுவது கடுமையான குற்றமாகும். இப்போது யோசேப்பின் அரண்மனைக்குத் திரும்பும்போது பெஞ்சமீன் பாதிக்கப்படக்கூடும் என்று சகோதரர்கள் கவலைப்பட்டனர்இ யூதா பெஞ்சமீனின் தண்டனையை தான் ஏற்க முன்வருகிறான். (44: 33)<br>2. தண்டனையை எதிர்கொள்வதற்குப் பதிலாக சகோதரர்கள் மன்னிப்பைப் பெற்றார்கள் (45: 5) மேலும்இ அவர்கள் என்ன செய்திருந்தாலும்இ தேவன் தன்னுடைய வாழ்க்கையில் அவருடைய நோக்கங்களை எவ்வாறு செயல்படுத்துகிறார் என்பதை யோசேப்பு அவர்களுக்கு விளக்குகிறான்.<br>3. சகோதரர்கள் யோசேப்பு உயிருடன் இருக்கிறான் என்ற நற்செய்தியுடன் யாக்கோபிடம் திரும்பிஇ யோசேப்பு அனுப்பிய பரிசுகளை அவருக்குக் காட்டுகிறார்கள். (45: 26-27) | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யோசேப்பின் சகோதரர்கள் தானியம் வாங்க வேண்டிய அவசியத்தில் எகிப்துக்கு வருகிறார்கள். யோசேப்பு அவர்களிடம் 'கடுமையாக' பேசுகிறான்இ அவர்கள் மன்னிக்கப்படுவதற்கு முன்பு அவர்கள் செய்த பாவத்தை ஒப்புக் கொள்ள அவன் அவர்களை தயார்படுத்துகிறான் என்பதைக் குறிக்கிறது. (42: 6-7)<br>2. யோசேப்பு அவர்களை மூன்று நாட்கள் சிறையில் அடைத்தான். அவர்கள் யோசேப்புக்கு எதிராக பாவம் செய்ததை அவர்கள் மனசாட்சியில் உணர்ந்தார்கள்இ எனவே அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். (42: 21)<br>3. யோசேப்பு தன் சகோதரர்களை சரிபடுத்தினாலும்இ அவன் அழுகிறான் என்று ஆதியாகமம் 42: 24 ல் சொல்லப்பட்டிருக்கிறதுஇ அவன் அன்பினால் அவ்வாறு அழுதான். யோசேப்பு தனது தகுதியற்ற சகோதரர்களுக்கு அன்பைக் காட்டும்போதுஇ உண்மையான கிருபையை இங்கே நாம் காண்கிறோம்.<br>கடைசியில் தனது சகோதரன் பெஞ்சமீனைப் பார்த்துபோது வேறொரு அறைக்குச் சென்று யோசேப்பு மிகவும் மனமுடைந்து அழுகிறான். (43: 30) |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்த பாடத்தை முக்கிய வசனத்துடன் இணைக்கவும்: "தேவன் என்னை எகிப்து தேசம் முழுதுக்கு அதிபதியாக வைத்தார்;" மேலும், "என்னிடத்தில் வாரும் தாமதிக்க வேண்டாம்." மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். | இரண்டு முக்கிய வசனங்களைக் கற்றுக் கொள்ளுங்கள்இ மேலும் அவை இந்தப் பாடத்தின் சுருக்கம் என்பதை மாணவர்களுடன் விவாதிக்கவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>யோசேப்பு எகிப்தில் உயிருடன் இருந்ததைப் போலவும்இ அனைவருக்கும் ஆட்சியாளராகவும் இருந்ததைப் போலவும் கர்த்தராகிய இயேசு பரலோகத்தில் உயிருடன் இருக்கிறார்இ அனைவருக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்வது முக்கியமாகும். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. ரோமர் 5: 21-ல் கர்த்தராகிய இயேசு அளிக்கும் கிருபையைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?<br>2.யோசேப்பு தன் சகோதரர்களிடம் அன்பு காட்டியதைப் போலவேஇ கல்வாரியில் நம்மைப் போன்ற பாவிகளுக்காக கர்த்தராகிய இயேசு மரித்தபோது காட்டிய பேரன்பைக் காண்கிறோம். லூக்கா 23: 34 |

| | B7 - நிலை 3<br>பாடம் 4 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - ஒன்றாக எகிப்தில் | B7 - நிலை 4<br>பாடம் 4 - யோசேப்பின் வாழ்க்கை<br>தலைப்பு - அவனது மன்னிப்பு |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஆதியாகமம் 46: 1-7; 26-34**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 50: 20**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. யோசேப்பின் நம்பிக்கைக்குரியத்தன்மை அவனுடைய முழு குடும்பத்தையும் பாதித்தது மேலும் அவர்களுக்குப் பல ஆசீர்வாதங்களை கொண்டுவந்தது. 2. 1 சாமுவேல் 2: 30-ல் உள்ள கர்த்தருடைய வாக்குறுதியின் உண்மையான உதாரணம் யோசேப்பு: “என்னை கனப்படுத்துகிறவர்களை நான் கனப்படுத்துவேன்.” | **தியானப் பகுதி: ஆதியாகமம் 44, 45**<br>**முக்கிய வசனம்: ரோமர் 5: 10**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. யோசேப்பின் சகோதரர்கள் தங்கள் பாவத்தை ஒப்புக்கொண்டபோதுஇ யோசேப்போடுள்ள அவர்களின் ஐக்கியம் மீட்டெடுக்கப்பட்டதுஇ அவ்வாறே நம்முடைய பாவத்தை ஒப்புக்கொண்டு மனந்திரும்பும்போதுஇ கர்த்தராகிய இயேசுவோடு உண்மையான மற்றும் அர்த்தமுள்ள ஐக்கியத்தில் நாம் நுழைய முடியும். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | யோசேப்பின் வாழ்க்கையில் தேவன் எவ்வாறு ஒரு திட்டத்தை செயல்படுத்துகிறார் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். எகிப்தில் கோசேனில் அவனுடன் வசிக்க முழு குடும்பமும் கானானிலிருந்து வந்தது. கானான் ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியினருக்கும் வாக்குறுதி அளிக்கப்பட்டது, ஆனால் தேவன் இதற்கிடையில், தேவனுக்கு எதிராய் திருப்பிய கானானியர்களின் தீய செல்வாக்கிலிருந்து யோசேப்பின் குடும்பத்தை விலக்கிக் கொண்டுசென்றார், கானானியர் தேவனைப் புறக்கணித்தாலும் இஸ்ரவேலர்களை திரும்பி கானானுக்கு கொண்டுவந்தார் | முந்தைய ஆய்வில்இ யோசேப்பு தனது சகோதரர்கள் தங்கள் பாவங்களை ஒப்புக்கொண்டு அறிக்கைசெய்வதற்கு உதவுவதற்காக எவ்வாறு திறமையாக செயல்பட்டான் என்பதை அறிந்து கொண்டோம். யோசேப்பு அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கும் அவனது சகோதரர்கள் உண்மையிலேயே சமரசம் செய்வதற்கும் அவர்களின் முறிந்த ஐக்கியத்தை மீட்டெடுப்பதற்கும் இப்போது வழி திறக்கப்பட்டுள்ளது. |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவன் யாக்கோபை தன் வீட்டை விட்டு வெளியேறிஇ ஒரு அறியாத மற்றும் தொலைதூர தேசத்திற்குச் செல்லும்படியும்இ அவரைக் கவனித்துக்கொள்வேன் என்றும் அவனுக்கு உறுதியளித்தார். (46: 2-3)<br>2. யாக்கோபின் மரணத்திற்குப் பிறகுஇ யோசேப்பினால் பழிவாங்கப்படுவார்கள் என்று சகோதரர்கள் அஞ்சினர்இ ஆனால் அவர்கள் ஆச்சரியப்படும்படி அவன் அவர்களை மன்னித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கவனித்துக்கொள்ள முன்வந்தான். (50: 15-21) நாம் அவருக்கே உரியவர்கள் என்று கூறினால்இ நம்முடைய எதிரிகள் உட்பட மற்றவர்களையும் மன்னிக்க வேண்டும். (முக்கிய வசனத்தைக் காண்க)<br>3. முழு குடும்பமும் தங்கள் உடைமைகளுடன் எகிப்துக்கு புறப்பட்டது. (46: 5-7)<br>4. யாக்கோபின் குடும்பம் கோசேனுக்கு வந்துஇ யோசேப்பும் யாக்கோபும் கண்ணீரோடெ மீண்டும் ஒன்றுசேர்கிறார்கள். (46: 29) | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யோசேப்பு தன்னை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டுஇ தேவன் எல்லாம் நன்மைக்காக நடப்பித்ததாக அவர்களிடம் கூறுகிறான். (45: 4-5)<br>2. கானானில் உள்ள தங்கள் தகப்பனாகிய யாக்கோபிடம் சகோதரர்கள் புறப்படுவதற்கு முன்புஇ யூதா எகிப்தில் தங்கி பென்யமீனுக்குப் பதிலாக அடிமையாகப் பணியாற்ற முன்வருகிறான். அவர்கள் யோசேப்பை அடிமைத்தனத்திற்கு விற்ற காலத்திலிருந்தே இது போன்ற ஒரு மாற்றம் யாக்கோபுக்கு பல வருட மனவேதனையை ஏற்படுத்தியது! தேவனுடைய கிருபை இப்போது அவரது இருதயத்தில் வேலை செய்கிறது. (44: 33)<br>3. பார்வோன் யோசேப்பின் சகோதரர்களிடம் தங்கள் தந்தையையும் குடும்பத்தினரையும் எகிப்துக்கு அழைத்து வரும்படி சொன்னான்இ அவன் அவர்களைப் பராமரிக்க ஏற்பாடுகளை செய்வதாக வாக்குறுதிசெய்தான். (45: 17-19)<br>4. யோசேப்பு அழுதுஇ பெஞ்சமீனைத் தழுவிஇ தன் சகோதரர்கள் அனைவரையும் முத்தமிடுகிறான். (45: 14) |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | இந்த பாடம் 4 இல் உள்ள கேள்விகளுக்கான பதில்களை நிரப்புவதற்கு கேட்கப்படும் கேள்விகள் அவர்களுக்கு உதவும் வகையில் மாணவர்களை கவனமாக கேள்வி கேளுங்கள். | யோசேப்பைப் பற்றிய இந்த கதையில் உள்ள ‘நற்செய்தி’ கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய ‘நற்செய்தி’ போன்றது என்பதில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும்: |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது: யோசேப்பு தன்னுடைய எதிர்காலம் என்னவாக இருக்கும் என்று அடிக்கடி யோசித்திருக்க வேண்டும். என்ன நடக்கப் போகிறது என்பதை நாம் எப்போதும் அறிந்திருக்க மாட்டோம். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>தேவன் யோசேப்புடன் இருந்தார்இ இது பல வருடங்கள் கழித்து புதிய ஏற்பாட்டில் ஸ்தேவான்இ தான் இரத்தசாட்சியாய் மரிப்பதற்கு முன்பு அங்கீகரித்தார். பரிந்துரைக்கப்பட்ட வேத வாசிப்பு (அப்போஸ்தலர் 7: 12-15) |

| | B8 - நிலை 3<br>பாடம் 1 - நற்செய்தி எழுத்தாளர்கள்<br>தலைப்பு - மத்தேயு | B8 - நிலை 4<br>பாடம் 1 - முன்னாலிருக்கும் வழி<br>தலைப்பு - கிறிஸ்தவர்களின் ஒற்றுமை |
|---|---|---|
| | **தியானப் பகுதி: மத்தேயு 9: 9-13; 27: 37-42**<br>**முக்கிய வசனம்: மத்தேயு 16: 16**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. ஒரு வரி வசூலிக்கும் மத்தேயு என்ற யூதனை இயேசு அழைத்தபோதுஇ அவர் உடனடியாக செவிசாய்த்து இயேசுவைப் பின்தொடர்ந்தார்.<br>2. யூதர்களில் பெரும்பாலோர் இயேசுவை ஏற்க மறுத்துவிட்டார்கள், இதன் விளைவாக அவர் சிலுவையில் அறையப்பட்டார். | **தியானப் பகுதி: அப் 2: 41-44, 4: 32-35**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 2: 42**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. மக்கள் கிறிஸ்தவர்களாக மாறியபோது சமூகங்களில் ஒன்றாக நேரத்தை செலவிடுவதன் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்தார்கள், தங்கள் நம்பிக்கையில் வளர முற்பட்டார்கள். 2. அவர்கள் ஒருவருக்கொருவர் முடிந்த வழிகளிலெல்லாம் உதவ முயன்றனர்இ மேலும் ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொண்டனர். |
| அறிமுகப்படுத்-துங்கள் | மத்தேயு ஒரு சுங்க அதிகாரியாக இருந்தார் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். இந்த மக்கள் வக்கிரமுள்ளவர்கள், மக்களிடமிருந்து அவர்கள் கூடுதலாக வரி வசூலித்தனர்இ மேலும் அந்நாட்களில் யூதர்களின் மேலதிகாரிகளாய் இருந்த ரோமானிய பேரரசின் நலன்களுக்காக அவர்கள் சேவை செய்தனர், இதனால் யூதர்களால் வெறுக்கப்பட்டனர். | பேதுரு இயேசுவின் சீடர்களில் ஒருவன் என்பதையும், சிலுவையில் அறையப்பட்டபோது இயேசுவை மறுதலித்ததையும் மாணவர்களுக்கு விளக்குங்கள். ஆயினும் இயேசு அவனை மன்னித்துவிட்டார், இப்போது அவன் தைரியமாக இயேசுவைப் பற்றி மக்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் செய்த தவறுகள் மன்னிக்க முடியாத அளவுக்கு மோசமாக இல்லைஇ இப்போது அவன் தேவனுக்காக பெரிதும் பயன்படுத்தப்பட்டான். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இரட்சகரின் அழைப்புக்கு மத்தேயு உடனடியாக பதிலளித்தார்.<br>2. கர்த்தராகிய இயேசுவின் உடனடி சீடராவதற்காக மத்தேயு நேர்மையற்ற வேலையை விட்டுவிட்டார். அவர் பன்னிரண்டு சீடர்களில் ஒருவராக இருந்தார். (9: 9)<br>3. மத்தேயு சுவிசேஷத்தை எழுதுவதில் மத்தேயு கௌரவிக்கப்பட்டார்இ யூதர்கள் மேசியா என்று அழைக்கும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ராஜா இயேசு என்பதைக் காட்டுகிறார்..<br>4. கர்த்தராகிய இயேசுவின் வருகையைப் பற்றி மத்தேயு அளிக்கும் விவரத்தை சுருக்கமாக கூறவும்இ<br>5. மத்தேயு இயேசுவின் வம்சாவளியைப் பதிவுசெய்கிறார்இ அவருடைய பொது ஊழியம்இ அவருடைய சோதனைஇ மரணம்இ அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் அது முடிவடைகிறது - இது நமது இரட்சிப்பின் அடித்தளம இ இதன் விளைவாக அவருடைய புத்தகம் 'சுவிசேஷம்' என்று அழைக்கப்படுகிறது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசுவின் சீடர்களில் ஒருவரான பேதுரு பலருக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தார், அவர்கள் செய்த பாவங்களைப் பற்றி மனம்வருந்தி, ஜீவனுள்ள கிறிஸ்துவை நம்ப வேண்டும் என விளக்கினார்.<br>2. இந்தப் புதிய கிறிஸ்தவர்கள் ஒரு சமூகமாக ஒன்றாக வேலை செய்யத் தொடங்கினர் - சபை உருவாகி வந்தது. அவர்கள் மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம்கொண்டு, அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கேட்டு, ஐக்கியம் மற்றும் இயேசுவின் மரணத்தை நினைவுகூருதலிலும் ஜெபத்திலும் ஒன்றாகச் சந்தித்துப் பங்கேற்றார்கள்.<br>3. கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர். இதற்கு அவர்கள் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டனர் என்று அர்த்தமல்லஇ ஆனால் அவர்கள் ஒரு குடும்பத்தைப் போல தேவைப்படுபவர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். |
| மீள்பார்வை செய்யுங்கள் | பாடம் 1ல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க உதவும் கேள்விகளை மாணவர்களிடம் கேட்டு பாடத்தை மீள்பார்வை செய்யவும். | கிறிஸ்தவர்கள் இன்று ஒரு சமூகமாக வளர்ந்து, தங்கள் விசுவாசத்தில் முதிர்ச்சியடையும் நடைமுறை வழிகளின் பட்டியலை இருவர் இருவராக சேர்ந்து உருவாக்கவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.உடனடியாக பதிலளிக்க வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு கர்த்தராகிய இயேசுவுக்கு நம் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பது? 2. இயேசு யூதர்களின் ராஜா மட்டுமல்ல அவர் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும் ஆவார். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால், மற்ற கிறிஸ்தவர்களுடன், ஐக்கியம் மற்றும் ஒருவரிலிருந்து ஒருவர் கற்றுக்கொள்வதில் நேரத்தை செலவிடுகிறோம் என்பதை நாம் உறுதிசெய்கிறோமா? நாம் தேவனுடைய வார்த்தையைப் படித்து ஒன்றாக ஜெபிக்காவிட்டால் வளர மாட்டோம். |

| | B8 - நிலை 3<br>பாடம் 2 - நற்செய்தி எழுத்தாள்கள<br>தலைப்பு - மாற்கு | B8 - நிலை 4<br>பாடம் 2 - முன்னேயுள்ள வழி<br>தலைப்பு - கிறிஸ்தவ ஞானஸ்நானம் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: அப்போ 12:5-12; மாற்கு 1:29-42**<br>**முக்கிய வசனம்: மாற்கு 10: 45**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. மாற்கு தனது நற்செய்தியில் இயேசுவை 'பரிபூரண தாசன்' என்று கவனம் செலுத்துகிறார், மேலும் அவர் சொன்னதை விட அவர் செய்ததைப் பற்றி எழுதுகிறார்.<br>2. கர்த்தராகிய இயேசு தம்மைச் சேவிக்க மற்றவர்களை எவ்வாறு தேர்வு செய்கிறார் என்பதை மாற்கு காட்டுகிறார். | **தியானப் பகுதி: மத் 28:16-20, அப் 8:34-39, 18:8 முக்கிய வசனம்: அப்போ 2: 41**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதாகும்.<br>2. பைபிளில் உள்ள பலர் கிறிஸ்தவர்களாகி, தங்கள் விசுவாசத்திற்கு பதிலளிக்கும் விதமாக ஞானஸ்நானம்பெற்றார்கள். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | மாற்கின் நற்செய்தியில், கர்த்தராகிய இயேசு பரலோகத்திலிருந்து பூமிக்கு வந்தது ஊழியம் பெற அல்ல, மாறாக ஊழியம் செய்வதற்காகவும், கல்வாரியின் சிலுவையில் அவருடைய ஜீவனை பலருக்கு மீட்கும்பொருளாகக் கொடுப்பதற்காகவும் வந்தார். (முக்கிய வசனம் சொல்வதுபோல) பூமியில் இருந்தபோதும், கர்த்தராகிய இயேசு தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார், அவருடைய வல்லமையான செயல்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியின் ஆற்றலால் மேற்கொள்ளப்பட்டன. | மாணவர்கள் ஞானஸ்நானத்தை கண்டிருக்கிறார்களா அல்லது ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்களா என்று கேளுங்கள். அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லுங்கள்; அது எப்படி இருந்தது? என்ன நடந்தது? இது எதைக் குறிக்கிறது என்று அவர்கள் நினைத்தார்கள்? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மாற்கு எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர், அவர்கள் யாக்கோபைக் கொன்ற ஏரோதிடமிருந்து பேதுரு பாதுகாப்பாக விடுவிக்கப்பட வேண்டும் என்று ஜெபித்தார்கள். (அப்போஸ்தலர் 12: 5-12)<br>2. நற்செய்தியைப் பரப்புவதில் தேவனுக்கு ஊழியம் செய்ய மாற்கு விரும்பினார், எனவே பவுலுடனும் அவருடைய கூட்டாளிகளுடனும் முதல் மிஷனரி பயணத்தில் அவர் புறப்பட்ட போதிலும், அவர்களை விட்டுவிட்டு எருசலேமுக்குத் திரும்பினார். (அப்போஸ்தலர் 12: 25,ரு 13: 13)<br>3. மாற்கு செல்லாமலிருந்தது ஊழியத்தில் ஒரு குறைவு என்று பவுல் கருதினார், மேலும் தனது இரண்டாவது மிஷனரி பயணத்தில் அவருடன் வர மாற்குவை அனுமதிக்கவில்லை. (அப்போஸ்தலர் 15: 37-39) ஆயினும், மாற்கு இறுதியில் ஒப்புரவாகி பவுலின் நம்பிக்கையை மீட்டெடுத்தார், மேலும் கர்த்தராகிய இயேசுவுக்கு தொடர்ந்து ஊழியம் செய்தார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசு பூமியை விட்டு போவதற்கு முன்பு, சீஷர்களுக்கு மாபெரும் கட்டளையைக் கொடுத்தார். உலகெங்கும் சென்று சீடர்களை உருவாக்கி, பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அவர் சொன்னபோது இது கொடுக்கப்பட்டது. அவர்கள் இதைச் செய்யும்போது அவர்களுடன் இருப்பதாக இயேசு வாக்குறுதி அளித்தார். இதைச் செய்வதற்கான அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தார். (மத்தேயு 28: 18-20)<br>2. ஞானஸ்நானம் கிறிஸ்துவுக்கு அடிபணிவதையும், தேவனுடைய வழியில் வாழ விருப்புவதையும், தேவனுடைய உடன்படிக்கை மக்களுடன் அடையாளம் காண்பதையும் குறிக்கிறது.<br>3. அப்போஸ்தலர் 8 லிருக்கும் கதையில், எத்தியோப்பிய மந்திரிக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிலிப்பு சொல்கிறார். அவர் ஒரு கிறிஸ்தவராகி உடனடியாக ஞானஸ்நானம் பெறுகிறார். |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்தி பாடத்தை மீள்பார்வை செய்யவும்:<br>1. கர்த்தராகிய இயேசுவை நற்செய்தி முழுவதிலும் மாற்கு எவ்வாறு முன்வைக்கிறார்?<br>2. மாற்கு எந்த வகையான குடும்பத்திலிருந்து வந்தவர்? | மாபெரும் கட்டளையைப் படியுங்கள் (மத்தேயு 28: 16-20)<br>1. இவற்றை இயேசு எவ்வாறு கட்டளையிட முடியும்? (வசனம் 18)<br>2. சீடர்களுக்கு வழங்கப்பட்ட நான்கு அறிவுறுத்தல்கள் |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவுக்கு நாம் செய்யக்கூடிய ஒரு ஊழியத்தின் பெயரைக் குறிப்பிடுங்கள்.<br>2. கடந்த காலத்தில் நாம் தோல்வியுற்றிருந்தாலும் சேவையில் முன்னேற முடியுமா? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நீங்கள் உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்குக் கொடுத்திருக்கிறீர்களா, உங்கள் புதிய வாழ்க்கையை அவருக்காக வாழ முற்படுகிறீர்களா?<br>2. அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா? |

| | B8 - நிலை 3<br>பாடம் 3 - நற்செய்தி எழுத்தாளர்கள்<br>தலைப்பு - லூக்கா | B8 - நிலை 4<br>பாடம் 3 - முன்னேயுள்ள வழி<br>தலைப்பு - கர்த்தருடைய பந்தி |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 1: 1-4; 4: 1-12**<br>**முக்கிய வசனம்: லூக்கா 19: 10**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவனுடைய குமாரனாக இருந்த அதே வேளையில், கர்த்தராகிய இயேசு 'பரிபூரண மனிதராக' இருந்தார் என்று லூக்கா வலியுறுத்துகிறார். 2. கர்த்தராகிய இயேசு பாவம் செய்ய முடியாது என்றும் அவர் பரிசுத்த, பாவமில்லாத மனிதர், பாவிகளின் இரட்சகராக இருக்கிறார் என்பதை சோதனைகள் நிரூபிக்கின்றன. | **தியானப் பகுதி: லூக்கா 22: 14-20, 1கொரி 11: 23-31 முக்கிய வசனம்: 1 கொரி 11: 26**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. அவரை ஒரு சிறப்பு வழியில் நினைவுகூரும்படி இயேசு நமக்குக் கட்டளையிட்டார்.<br>2. இந்த நினைகூருதலை நாம் கருத்தாய் கைக்கொள்ள வேண்டும். |
| அறிமுகப்படுத்-துங்கள் | லூக்கா சுவிசேஷமும் அப்போஸ்தல நடபடிகளும் தியோபெலஸுக்கு எழுதப்பட்டிருந்தாலும், அவரைப் பற்றி நமக்கு சிறிதளவே அறியமுடிகிறது. 'மகா கனம்பொருந்திய' (லூக்கா 1: 3) என்று அடைமொழி அவர் ஒரு அரசாங்க அதிகாரியாக இருந்தார் என்பதைக் குறிக்கிறது. அவரது பெயருக்கு 'தேவனுடைய நண்பர்' என்று பொருள். அவர் அநேகமாக ரோமானியப் பேரரசில் பொறுப்பான வேலையிலிருந்த ஒரு கிறிஸ்தவராக இருக்கலாம். லூக்கா இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்ட தொகுப்பை அவருக்குக் கொடுத்தார். | மாணவர்கள் இப்பொழுது தங்களுடன் இல்லாத ஒருவரை, ஒருவேளை புகைப்படங்கள் அல்லது சிறப்பு நினைவுகளால் நினைவில் வைத்திருக்கும் வழிகளைப் பற்றி சிந்திக்கச் சொல்லுங்கள். இனிமேல் தான் இல்லாதபோது சீடர்கள் அவரை நினைவுகூர ஒரு சிறப்பு வழியை இயேசு விட்டுச்சென்றார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. லூக்கா ஒரு புறஜாதி கிறிஸ்தவ மருத்துவராக இருந்தார், அவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மிக நெருங்கிய நண்பராக இருந்தார்.<br>2. லூக்கா இயேசுவை 'அவரது பிறப்பிலேயே கர்த்தராகிய கிறிஸ்துவான இரட்சகர்' என்று குறிப்பிடுகிறார் (லூக்கா 2: 11). அவர் அவதரித்த தேவன்.<br>3. தனது இயல்பான வளர்ச்சியில் முற்றிலும் பரிபூரணர் என்று லூக்கா பதிவு செய்கிறார் (லூக்கா 2: 52). கர்த்தர் தேவ ஞானத்தின் வளர்ந்தது அவருடைய மன வளர்ச்சியைப் பற்றி பேசுகிறது, உருவ வளர்ச்சி அவரது உடல் வளர்ச்சியைப் பற்றி பேசுகிறது, 'தேவ தயவிலும்' வளர்ந்தார் என்பது அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சியைப் பற்றியும், 'மனித தயவிலும்' என்பது அவருடைய சமூக வளர்ச்சியைப் பற்றியும் பேசுகிறது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கடைசி இரவில் சீடர்களும் இயேசுவும் ஒன்றாக இருந்தனர், இயேசு சிறிது அப்பத்தையும் திராட்சரசத்தையும் எடுத்து அவைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தினார். அப்பம் அவருடைய உடல் என்றும், அவர்களுக்காக நொறுக்கப்படுவதாகவும், திராட்சைரசம் அவருடைய இரத்தம் என்றும் அது அவர்களுக்காக சிந்தப்படுகிறதாகவும் கூறினார். பின்னர் அவர் தம்மை நினைவுகூருவதற்காக அப்பத்தை சாப்பிட்டு திராட்சைரசத்தைக் குடிக்கச் சொன்னார். (லூக்கா 22: 14-20)<br>2. சீஷர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை, ஏனெனில் விரைவில் என்ன நடக்கும் என்று இயேசுவுக்கு மட்டுமே தெரியும். ஆனால் சீஷர்கள் இந்த கட்டளையை நினைவில் வைத்திருந்தார்கள். |
| மீள்பார்வை செய்யுங்கள் | பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்தி பாடத்தை மீள்பார்வை செய்யவும்:<br>1. லூக்கா சுவிசேஷத்தின் கருப்பொருள் என்ன?<br>2 .லூக்காவின் வேலை என்ன?<br>3. அவர் ஏன் தியோபிலஸுக்கு எழுதினார்?<br>4. இயேசு பிறக்கும்போதே 'இரட்சகராகிய கர்த்தராகிய கிறிஸ்து' என கொடுக்கப்பட்ட பெயர்களின் முக்கியத்துவம் என்ன? | அவரை நினைவுகூரும் வகையில் இந்த சின்னங்களில் பங்குகொள்வதற்கு முன்பு நம்மை நாமே சோதனை வேண்டும் என்று 1 கொரிந்தியர் 11: 27-31 கூறுகிறது. இதன் பொருள் என்ன என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்பதைப் பற்றி விவாதிக்கவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கர்த்தராகிய இயேசுவை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள் - 'பரிபூரண மனிதனாகவா' அல்லது வேறு எந்த மனிதனையும் போலவா?<br>2. இந்த பரிபூரண மனிதனை உங்கள் இரட்சகராக நம்பியிருக்கிறீர்களா? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. கிறிஸ்தவர்களாகிய நாம் அப்பத்தையும் திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு அவைகள் பிரதிநிதித்துவப்படுத்துவதை கருத்தாய் மதிக்கிறோமா?<br>2. "புதிய உடன்படிக்கையில்" ஆசாரியர்கள் மற்றும் பலிகள்மூலம் நாம் செல்ல வேண்டியதில்லை, |

| | B8 - நிலை 3<br>பாடம் 4 - நற்செய்தி எழுத்தாளர்கள்<br>தலைப்பு - யோவான் | B8 - நிலை 4<br>பாடம் 4 - முன்னேயுள்ள வழி<br>தலைப்பு - கிறிஸ்தவராக வளருதல் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யோவான் 20: 26-31**<br>**முக்கிய வசனம்: யோவான் 20: 31**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு 'நான்' என்ற வார்த்தையை பலமுறை பயன்படுத்தினார், அவ்வாறு செய்யும்போது, தேவனுடனான சமத்துவத்தை சொல்கிறார், ஏனென்றால் பழைய ஏற்பாட்டில் 'நான்' என்று தேவன் தன்னை அழைத்துக்கிறார். (யாத்திராகமம் 3: 14-15) | **தியானப் பகுதி: 1பே 2:1-3, 2 பே 3:18, அப் 17:10-12 முக்கிய வசனம்: 1 பே 2:2**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் தினமும் வளர வேண்டும்.<br>2. எல்லோரும் தேவனுடைய கிருபையையும் அறிவையும் பற்றி எப்போதும் அதிகம் அறிய வேண்டும். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | இயேசுவை 'வார்த்தை' என்று குறிப்பிடுவதன் மூலம் யோவான் தனது நற்செய்தியைத் தொடங்குகிறார். சொற்கள் என்பது மற்றவர்களுக்கு நாம் விளக்கும் அல்லது வெளிப்படுத்தும் வழிமுறையாகும். 2000 ஆண்டுகளுக்கு முன்பு பெத்லகேமில் கன்னி மரியாளுக்குப் பிறந்தபோது, தேவகுமாரன் மனுஷகுமாரனாக ஆனபோது, தேவன் தம்முடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலம் இந்த உலகத்திற்கு தன்னை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். | விலங்குகள், குழந்தைகள், தாவரங்கள், மரங்கள் ஆகியன எவ்வாறு வளர்கின்றன என்பதை ஒரு குழுவாக விவாதிக்கவும். இவை வளர என்ன தேவை? அவைகளுக்குத் தேவையானதைப் பெறாவிட்டால் என்ன ஆகும்? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. யோவான் இயேசுவை 'வார்த்தை' என்று குறிப்பிடுகிறார் (யோவான் 1: 1)<br>2. யோவான் தன்னை 'இயேசு நேசித்த சீடன்' என்று குறிப்பிடுகிறார் (யோவான் 20: 2)<br>3. யோவான் சுவிசேஷத்தில், 'நான்' என்பது தேவனுக்கான தலைப்பு, இயேசு தேவனுடைய குணாதிசயங்கள் அல்லது நற்குணங்களை ஏழு வெவ்வேறு வழிகளில் குறிப்பிட்டார்: ஜீவ அப்பம். (யோவான் 6: 35, 41, 48, 51)<br>உலகின் ஒளி. (யோவான் 8: 12, 9: 5)<br>வாசல். (யோவான் 10: 7, 9) நல்ல மேய்ப்பன். (யோவான் 10: 11, 14)<br>உயிர்த்தெழுதல் மற்றும் ஜீவன். (யோவான் 11: 25-26) வழி, சத்தியம் மற்றும் ஜீவன் (யோவான் 14: 6) மெய்யான திராட்சைச் செடி. (யோவான் 15: 1, 5)<br>4. கர்த்தராகிய இயேசுவை நம்புவதற்கும் நித்திய ஜீவனைப் பெறுவதற்கும் யோவான் தனது நற்செய்தியை எழுதினார். (யோவான் 20: 30-31) | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. 1 பேதுரு 2: 1ல், நாம் வஞ்சகர்களாகவும், வெளிவேஷக்காரராகவும், பொறாமையுள்ளவர்களாகவும் இருக்கக் கூடாது அல்லது கீழ்த்தரமான விஷயங்களைச் சொல்லக்கூடாது என்று அது சொல்கிறது.<br>2. ஒரு கிறிஸ்தவராக நாம் வாழ ஒரு குறிப்பிட்ட வழி இருக்கிறது. நம்முடைய நடத்தை மற்றும் செயல்களில் கிறிஸ்துவின் தன்மையை நாம் பிரதிபலிக்க வேண்டும். பைபிளில் பல வசனங்கள் உள்ளன, அவை அவரை மதித்தால் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிய உதவுகிறது.<br>3. புதிய கிறிஸ்தவர் புதிதாகப் பிறந்த குழந்தையைப் போல இருப்பது பற்றி 1 பேதுரு பேசுகிறது. வளர, அவர்கள் பால் குடிக்க வேண்டும். இந்த பால் தேவனுடைய வார்த்தை. இந்த வளர்ச்சி ஒருபோதும் நிற்காது, ஒரு குழந்தை வளர வளர,அதற்கு இன்னும் உணவு தேவை. அதேபோல், ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் அவர்களுக்கு வளர உதவும் உணவு (பைபிள்) தேவைப்படாத நேரம் இருக்கவே முடியாது. |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஏழு 'நான்' என வரும் குணாதிசயங்களில் ஒவ்வொன்றையும் எடுத்து, இயேசு தேவனுடைய குமாரன் என்பதை அவை ஒவ்வொன்றும் எவ்வாறு காட்டுகிறது என்பதைப் பற்றி விவாதிக்கவும். | பவுலும் சீலாவும் பேசிய பெரேயாவில் உள்ள மக்கள் (அப்போஸ்தலர் 17: 10-12) கற்றுக்கொள்ள ஆர்வமாக இருந்தனர், பவுலும் சீலாவும் உண்மையைச் சொல்கிறார்களா என்று வேதவசனங்களைத் தேடி சரிபார்த்தனர். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. இயேசு தேவனுடைய குமாரன் என்று நம்புகிறார்களா என மாணவர்களிடம் சவாலாய் கேளுங்கள்.<br>2. அப்படியானால், அவர்கள் அவர்மீது நம்பிக்கை வைத்து நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறார்களா? (யோவான் 1: 12-13, 5: 24) | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நாம் ஒவ்வொரு நாளும் வளர முற்படுகிறோமா? நம்முடைய விசுவாசத்தை வலுப்படுத்திக்கொள்ள நாம் தேவனைப் பற்றி மேலும் படிக்க விரும்புகிறோமா? தேவனுடைய வார்த்தையைப் படிப்பதன் மூலமும், பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுவதன் மூலமும் மட்டுமே நாம் வளருவோம். |

| | B9 - நிலை 3<br>பாடம் 1 - மோசே<br>தலைப்பு - கூடையில் குழந்தை | B9 - நிலை 4<br>பாடம் 1 - மோசே<br>தலைப்பு - இளவரசன் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத் 1: 6-14, 22; 2: 1-10**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11: 23**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேலா் எகிப்தில் அதிகாரம் மற்றும் எண்ணிக்கையில் அதிகமடைந்தனர், மேலும் போரின் போது அவர்கள் தனக்கு அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று பார்வோன் நினைத்தான், எனவே எல்லா ஆண் குழந்தைகளையும் அழிக்கும்படி அவன் கட்டளையிட்டான். | **தியானப் பகுதி: யாத் 1: 5-22; 2: 1-25**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11: 23**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேலா் எகிப்தில் அதிகாரத்திலும், எண்ணிக்கையிலும் அதிகரித்ததால், போரின் போது அவர்கள் தனக்கு அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று பார்வோன் நினைத்தான், எனவே எல்லா ஆண் குழந்தைகளையும் அழிக்கும்படி கட்டளையிட்டான். |
| அறிமுகப்படுத்-துங்கள் | பாடங்கள் B7 மற்றும் B8 ஐ மீள்பார்வை செய்து, யோசேப்பு மற்றும் அவனது சகோதரர்கள் எகிப்துக்கு வந்து 300 ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரவேலர்கள் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளனர் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒரு புதிய பார்வோன் அவர்களை அடிமைகளாக்கினான். இதற்கிடையில், மோசேயின் பிறப்பு மற்றும் பாதுகாப்பில் தேவன் அவர்களுக்காக தனது திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருந்தார். மோசே அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்வான். | பாடங்கள் B7 மற்றும் B8 ஐ மீள்பார்வை செய்க. யோசேப்பு இறந்தபோது, இஸ்ரவேல் புத்திரா் ஒரு பெரிய குடும்பமாக இருந்தனா் என்று மாணவர்களுக்கு விளக்குங்கள். இருப்பினும், அவர்கள் ஒரு பெரிய தேசமாக மாறினா், இது புதிய பார்வோனுக்கு கவலையளித்தது அவன் அவர்களை அடிமைகளாக்கியதைப் பற்றியது இந்தப் பாடம். இருப்பினும் தேவன் அவர்களை மறக்கவில்லை, இஸ்ரவேல் தேசத்துக்கான தனது திட்டத்தை நிறைவேற்றுவார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. பார்வோன் ஆட்சிக்கு வந்தான், இஸ்ரவேலரின் செழிப்பு (1: 7) துன்புறுத்தலாக மாறுகிறது (1: 8-11) ஆனால் தேவன் அவர்கள்மீது கண் வைத்து அவர்களைப் பாதுகாத்தார். (1: 12)<br>2. புதிதாகப் பிறந்த குழந்தைகள் அனைவரையும் கொல்ல வேண்டும் என்று பார்வோன் உத்தரவிட்டான். (1: 15-20)<br>3. அம்ராம் மற்றும் யோகெபெத்துக்கு மோசே பிறந்தான், அவனை மூன்று மாதங்கள் கவனித்துக்கொண்ட பிறகு, அவனை ஒரு சிறிய நாணற்பெட்டியில் வைத்து நைல் நதியின் ஓரத்தில் விட்டார்கள். (2: 1-3)<br>4. அவனுடைய சகோதரி மிரியாம், அவனது தாயார் மற்றும் பார்வோனின் மகள் ஆகியோரைப் பயன்படுத்தி (2: 4-9) தேவன் மோசேயின் உயிரைப் பாதுகாத்தார்.<br>5. மோசே 'பார்வோனுடைய மகளின் மகன்' (அப்போஸ்தலா் 7: 22) என்பதால் உயர் கல்வி பெற்றான், மேலும் எகிப்தின் சிம்மாசனத்தின் வாரிசாகவும் இருந்தான். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேலா் தனது ராஜ்யத்தை அச்சுறுத்துவார்கள் என்று பார்வோன் பயந்தான், ஆகவே அவர்களுடைய வளர்ச்சியைத் தடுக்க அவர்களை அடிமைகளாக்கினான். (1: 8-11)<br>2. இஸ்ரவேலா் மென்மேலும் வலிமையாக வளா்ந்தனா், எனவே மருத்துவச்சிகள் பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் கொல்ல வேண்டும் என பார்வோன் கட்டளையிட்டான், ஆனால் அவனுடைய கட்டளைகளுக்கு எதிராக மருத்துவச்சிகள் அக்குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றினா். (1: 15-20)<br>3. மோசே பிறந்தபோது, ஒரு சிறிய நாணற்பெட்டியைத் தயாரித்து, அவனது தாய் அவனை நைல் நதியின் ஓரத்தில் வைத்தாள். (2: 1-3)<br>4. பார்வோனின் மகள் மோசேயைக் காப்பாற்றினாள், இறுதியில் அவனுடைய அம்மாவே அவனை வளர்ப்பவள் ஆனாள். (2: 4-9) |
| மீள்பார்வை செய்யுங்கள் | சில வாக்கியங்களில், அவர்கள் கற்றுக்கொண்டவற்றை சுருக்கமாகக் கூறும்படி மாணவர்களைக் கேளுங்கள்:<br>(1) மோசேயின் பிறப்புக்கான பின்னணி<br>(2) அவனது பாதுகாப்பு<br>(3) அவனுடைய பராமரிப்பு | ஆய்வு 1ல் உள்ளவையோடு நெருங்கிய தொடர்புடைய கேள்விகளைக் கேட்டு இந்த பாடத்தை மீள்பார்வை செய்யவும். மருத்துவச்சிகளும் மோசேயின் பெற்றோரும் எவ்வாறு தேசத்தின் சட்டத்திற்குக் கீழ்ப்படியவில்லை என்பதைப் பற்றி சிந்தியுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>மோசேயுடைய வாழ்க்கைக்கு ஒரு பெரிய திட்டம் இருந்ததால், தேவன் குழந்தையான மோசேயின் வாழ்க்கையை கட்டுப்படுத்தி வழிநடத்தியது போலவே, கா்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சிப்பிற்காக நம்பும்போது, அவர் வழிநடத்துவார். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>மோசேயின் பெற்றோரும் மருத்துவச்சிகளும் தேவன்மீது நம்பிக்கை வைத்து அவருக்கு அஞ்சினார்கள், அதனால் நிலைமை நம்பிக்கையற்றதாகத் தோன்றினாலும் அவர்கள் நியாயமான காரியத்திற்காக எதிர்த்து நின்றார்கள். கடினமான காலங்களில் நாம் அவருக்கு உண்மையாக இருக்கிறோமா? |

| | B9 - நிலை 3<br>பாடம் 2 - மோசே<br>தலைப்பு - அவனது பெரிய தவறு | B9 - நிலை 4<br>பாடம் 2 - மோசே<br>தலைப்பு - மேய்ப்பன் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத்திராகமம் 2: 11-22**<br>**முக்கிய வசனம்: எண்ணாகமம் 32: 23**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. மோசே தனது மக்களுக்கு உதவ ஆரம்பிக்க விரும்புகிறான்.<br>2. நம்முடைய பாவத்தை மற்றவர்களிடமிருந்து மறைக்க முயற்சித்தாலும் அதை கர்த்தராகிய இயேசுவிடமிருந்து மறைக்க முடியாது. | **தியானப் பகுதி: யாத்திராகமம் 3:1-16; 4: 1-17**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 7: 35**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் மோசேக்குத் தோன்றி, தம் மக்களை மீட்பதற்காக திரும்பிச் செல்லும்படி சொல்கிறார்.<br>2. தாம் செய்யும்படி மோசேயை அழைத்த காரியத்தில் தேவன் அவனுடன் இருப்பதாக தேவன் வாக்குறுதி அளிக்கிறார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | பாடம் 1ன் முடிவில், மோசே 'பார்வோனுடைய மகளின் மகன்' ஆகி அரண்மனையில் வளர்ந்ததை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். இந்த பாடத்தில் அவனுக்கு இப்போது நாற்பது வயது (அப்போஸ்தலர் 7: 23), எகிப்தில் இஸ்ரவேல் புத்திரர் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதைக் குறித்து மிகவும் அக்கறை கொண்டுள்ளான். அவன் ஒரு எகிப்தியனைக் கொன்றான் (யாத்திராகமம் 2: 14) | யாத்திராகமம் 3: 1-ல் உள்ள ஓரேப் மலை சீனாய் மலை என்பதையும் மோசேயின் வாழ்க்கையில் மிக முக்கியமான இடம் என்பதையும் மாணவர்களுக்கு விளக்குங்கள். யாத்திராகமம் 3:12ல், தேவன் மோசேயிடம் கூறுகிறார்: 'நீங்கள் இந்த மலையில் தேவனைச் சேவிப்பீர்கள்.' இந்த மலையில்தான் தேவன் மோசேயுடன் பேசி, 'பத்து கட்டளைகளை' கொடுத்தார்.<br>(19: 1-20) |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மோசே இஸ்ரவேலரின் அவலநிலையைக் குறித்து மிகுந்த அனுதாபம் கொண்டிருந்தான், ஆனால் ஒரு எகிப்தியனைக் கொன்ற அவனது மோசமான செயலால் தேவன் அதிருப்தி அடைந்தார். அவன் நிலைமையைப் பற்றி தேவனிடம் ஜெபித்து அவருடைய வழிகாட்டுதலை நாடியிருக்க வேண்டும்.<br>2. மோசே தன் சொந்த கையால் இஸ்ரவேலரை விடுவிப்பேன் என்று நினைத்தான், ஆனால் அது இன்னும் தேவனுடைய திட்டத்தின் நேரமல்ல.<br>3. அவன் செய்த பாவம் தெரிந்ததும், அவன் மீதியான் தேசத்திற்கு ஓடினான். (2: 15)<br>4. மீதியானில் உள்ள ஒரு கிணற்றருகே அவன் தனது வருங்கால மனைவி சிப்போராவை சந்தித்தான் (2: 21) அவர்களுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். ஒருவன் கெர்ஷோம் என்று அழைக்கப்பட்டான், அதாவது 'அந்நியன்.' இந்த பெயர் மீதியான் தேசத்தில் இருந்தபோது மோசேயின் தனிமை உணர்வை வெளிப்படுத்தியது. 'தேவன் என் உதவி' என்று பொருள்படும் எலியேசர் என்ற மகனும் இருந்தான். எகிப்தியனைக் கொன்றதால் தன்னைக் கொல்ல முயன்ற பார்வோனிடமிருந்து அவரை விடுவித்த தேவனுக்கு மோசே நன்றி தெரிவித்தான். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மோசே எகிப்திலிருந்து தப்பி ஓடிவிட்டான்இ இப்போது மீதியானியர்களிடையே வாழ்கிறான்.<br>2. எரியும் முட்புதரிலிருந்து தேவன் மோசேயுடன் பேசினார்இ மோசே பயபக்தியுடன் தனது காலணிகளை அகற்றினான். இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவர அவன் பார்வோனிடம் செல்ல வேண்டும் என்று தேவன் அவனுக்குச் சொன்னபோதுஇ மோசே அந்த வேலைக்கு தனது தகுதிக்குறைவை அறிவித்தான். (3: 10-11)<br>3. எகிப்தியர்களுக்கு பல தெய்வங்கள் இருந்தபோதும்இ இஸ்ரவேலர்களிடம் 'நான் என்பவர் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்' (3: 14) என்று சொல்லச் சொன்னார்- உண்மையான மற்றும் மாறாத ஒரே தேவன்!<br>4. தேவன் மோசேயின் கோலைப் பயன்படுத்துகிறார்இ அதை ஒரு பாம்பாக மாற்றிஇ மோசேக்கு தமது வல்லமையைக் காட்டுகிறார்இ அதே வல்லமையை மோசே மக்களுக்கு காட்ட முடியும் என்பதையும் காட்டுகிறார்இ இதனால் உண்மையில் தேவன் யார் என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள். |
| மீள்பார்வை செய்யுங்கள் | அப்போஸ்தலர் 7: 23-29 ஐப் படிப்பதன் மூலம் இந்த பாடத்தை மீள்பார்வை செய்யுங்கள் மற்றும் பாடம் 2ல் கேட்கப்பட்ட தொடர்புடைய கேள்விகளை மாணவர்களிடம் கேளுங்கள். | சில உரையாடல் குமிழ்களுடன் மோசே இஸ்ரவேல் மக்களை விடுவிக்க எகிப்துக்குத் திரும்புவதை சுவரொட்டியாக வரையவும்இ அது தேவன் அவனை அனுப்புகையில் அவன் எப்படி நினைத்திருப்பான் என்பதை காட்டுவதாக இருக்கட்டும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. அவருக்காக நாம் செய்யும் சேவையில்இ நம்முடைய சொந்த கருத்துக்களுக்கு ஏற்ப செய்யாமல் அவருடைய வழியில் சரியான காரியங்களை செய்ய கர்த்தராகிய இயேசுவை நமக்கு வழிகாட்டும்படி கேட்டுக்கொள்வது முக்கியமானதாகும். | இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:<br>மோசேக்குத் தோன்றிய அதே தேவன்இ இன்றும் இருக்கிறார்இ நம்முடைய இருதயங்களில் வாழ்கிறார். அவர் அவர்களின் இதயங்களில் வாழ்கிறாராஇ அவர்களின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறாரா என்று மாணவர்களுக்கு சவால் விடுங்கள். |

| | B9 - நிலை 3<br>பாடம் 3 - மோசே<br>தலைப்பு - எரியும் முட்புதர் | B9 - நிலை 4<br>பாடம் 3 - மோசே<br>தலைப்பு - தலைவன் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத் 2: 23-25; 3: 1-10**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 15: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. எகிப்தின் புதிய ராஜாவால் இஸ்ரவேல் புத்திரர் அடிமைகளாக நடத்தப்பட்டதை தேவன் அறிந்திருந்தாஇ ஆனால் அவர் அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துவரப் போகிறார். | **தியானப் பகுதி: யாத்திராகமம் 7: 1-25**<br>**முக்கிய வசனம்: நீதிமொழிகள் 29: 1**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவனுடைய வல்லமை எந்தவொரு மனிதனை விடவும் அல்லது இயக்கத்தைவிடவும் மகா பெரியது - அவர் 'எல்லாம் வல்லவர்' - அவர் சர்வ வல்லமையுள்ளவர்.<br>2. சிலர் சிக்கலில் இருக்கும்போது மட்டுமே தேவனை அழைக்கிறார்கள்இ |
| அறிமுகப்படுத்-துங்கள் | **கர்த்தராகிய இயேசுவுக்கு பெத்தானியா எப்படி சிறப்பு**<br>தற்போதைய நிலைமையை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்; மோசே எகிப்தை விட்டு வெளியேறி மீதியானில் குடியேறி தனது புதிய வாழ்க்கையைத் தொடங்கினான். பார்வோன் குறிப்பாக அவனைக் கொல்ல விரும்பினதால் எகிப்துக்குத் திரும்புவதற்கான எண்ணம் மோசேக்கு இல்லாதிருந்தது. இஸ்ரவேலர் இன்னும் எகிப்தில் பெரிதும் துன்பப்படுகிறார்கள்இ உதவிக்காக தேவனிடம் கூக்குரலிடுகிறார்கள். தேவன் அவர்களின் வேண்டுகோளுக்கு மோசே மூலமாக பதிலளிக்கத் தொடங்குகிறார். | எகிப்தில் தான் என்ன எதிர்கொள்வான் என்று தெரியாமலிருந்த மோசே இந்தக் கட்டத்தில் எப்படி உணர்ந்திருக்க வேண்டும் என்பதை மாணவர்களுடன் சிந்தியுங்கள். நாம் எதைப்பற்றியாவது பதட்டமாக இருக்கும்போதுஇ சில நேரங்களில் என்ன நடக்கிறதுஇ அல்லது அது ஏன் நடக்கிறதுஇ யார் நமக்கு உதவுகிறார்கள் என்பதைப் பற்றி நாம் உறுதிசெய்ய வேண்டியிருக்கிறது. யாத்திராகமம் 7: 1-5-ல் தேவன் மோசேக்காக இதைச் செய்தார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேல் புத்திரரின் நிலை பற்றிய தேவனுடைய அறிவு - அவர் கண்டார்இ கேட்டார்இ அவர்களுடைய துக்கங்களை அவர் அறிந்தார். (2: 23-25)<br>2. தேவன் அவர்களின் அழுகைகளைக் கேட்டுஇ சீனாய் மலையில் மோசேக்கு தன்னை எரியும் முட்புதரில் அவர் யார் என்பதையும் அவருடைய பரிசுத்தத்தையும் வெளிப்படுத்துகிறார்.<br>3. இஸ்ரவேல் புத்திரர்மீது தமது அக்கறையைப் பற்றியும் (வசனம் 7)இ பார்வோனிடமிருந்து அவர்களை எவ்வாறு விடுவிக்கப் போகிறார் (வசனம் 8) என்பதையும்இ அவர்களை எகிப்திலிருந்து வெளியேற்றுவதற்காக மோசேயைப் பயன்படுத்தப் போகிறார் என்பதையும் தேவன் மோசேயிடம் கூறுகிறார். (வசனம் 10)<br>4. பைபிளில் 'பரிசுத்தம்' என்ற வார்த்தையின் முதல் குறிப்பு யாத்திராகமம் 3: 5-ல் வருகிறது என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்இ மேலும் அவனது செருப்பை அகற்றுவதன் மூலம் மோசே தான் நின்ற இடத்தை 'பரிசுத்தமானது' என்று ஒப்புக்கொண்டான். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவன் மோசேயை ஒரு ஆற்றல்வாய்ந்த நபராக ஆக்கியுள்ளார் ('நான் உன்னை பார்வோனுக்கு ஒரு தேவனாக ஆக்கியுள்ளேன்' (7: 1) - அவர் செவிசாய்க்கப்பட வேண்டியவர்இ ஆனால் பார்வோன் அவருக்கு கீழ்ப்படிய மறுத்துவிட்டான்.<br>2. கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசேயும் ஆரோனும் செய்தார்கள்இ ஆரோன் தன் கோலை பார்வோனுக்கு முன்பாக எறிந்தபோதுஇ அது ஒரு பாம்பாக மாறியதுஇ பார்வோனின் மந்திரவாதிகளும் தங்கள் கோல்களைத் தூக்கி எறிந்தபோது அவைகளும் பாம்புகளாக மாறினஇ ஆனால் ஆரோனின் கோல் அவர்களுடைய கோல்களை விழுங்கிஇ தேவனுடைய வல்லமையைக் காட்டியது. (7: 8-12)<br>3. மோசேயும் ஆரோனும் நைல் நதியின் மீது கோலை நீட்டினர்இ அது இரத்தமாக மாறியது. மீன் இறந்ததுஇ குடிப்பதற்கும்இ விவசாயம் செய்வதற்கும்இ குளிப்பதற்கும்இ மீன்பிடிக்கவும் தண்ணீரைப் பயன்படுத்த முடியவில்லை. (7: 20-21)<br>4. மக்களை விடுவிக்க வேண்டும் என்ற மோசேயின் கோரிக்கைகளை பார்வோன் எதிர்த்தான். |
| மீள்பார்வை செய்யுங்கள் | மாணவர்களை அப்போஸ்தலர் 7: 30-35 வாசிக்கவைப்பதன் மூலம் பாடத்தை மீள்பார்வை செய்யவும். எரியும் முட்புதர் சம்பவத்தையும் குறிப்பிட்டு மோசேயின் வாழ்க்கையைப் பற்றி ஸ்தேவான் எப்படி பேசினார் என்பதை மாணவர்களுக்குக் காட்டுங்கள். | முக்கிய வசனத்தைப் பார்த்துஇ இந்த ஆய்வோடு இது எவ்வாறு சம்பந்தப்படுகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதை வகுப்பினருடன் கலந்துரையாடுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. தேவன் பரிசுத்த தேவன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்இ மேலும் அவருக்குரிய மரியாதை மற்றும் பயபக்தியை நாம் அவருக்கு கொடுக்க வேண்டும். இன்று பலர் செய்வது போல நாம் ஒருபோதும் அவருடைய பெயரை வீணாக பயன்படுத்தக்கூடாது. | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நதியை இரத்தமாக மாற்றுவது ஒரு அதிசயமான நிகழ்வாகும்இ ஆனால் கர்த்தராகிய இயேசுவையும் சிலுவையில் அவர் செய்த வேலையையும் நம்பும்போது தேவன் நம் வாழ்வில் இதிலும் மேலான ஒரு அற்புதத்தைச் செய்ய முடியும். |

| | B9 - நிலை 3<br>பாடம் 4 - மோசே<br>தலைப்பு - தேவனுடைய செய்தி | B9 - நிலை 4<br>பாடம் 4 - மோசே<br>தலைப்பு - விடுவிப்பவர் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத் 5:1-9; 22-23; 6: 1-9**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 10: 31**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கும்படி பார்வோனை அணுகி கேட்டார்கள்இ ஆனால் பார்வோன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. | **தியானப் பகுதி: யாத் 11:1-10; 12:1-13, 21-42**<br>**முக்கிய வசனம்: யோவா 1:29; 1 கொரி 5:7**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. எகிப்தியரின் கீழ்ப்படியாமைக்காக தேவன் தம்முடைய தீர்ப்பை அவர்கள்மீது காட்டினார்இ ஆனால் இஸ்ரவேலரின் கீழ்ப்படிதலுக்காக அவர்களுக்கு கருணை காட்டினார்.<br>2. பஸ்கா ஆட்டுக்குட்டிஇ கர்த்தராகிய இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை சுட்டிக்காட்டுகிறது |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | தேவன் மோசேயை எகிப்துக்குத் திரும்பிப் போகும்படி கட்டளையிட்டார்இ இருந்தபோதிலும் மோசே என்ன நடக்குமோ என்று பயந்தான் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். தேவன் அவனுடன் இருப்பதாக வாக்குறுதியளித்தார்இ ஆனால் அவனை மீண்டும் பார்க்கும்போது பார்வோன் எப்படி நடந்துகொள்வான் என்று மோசேக்குத் தெரியாது. ஆகவேஇ தனக்கு உதவியாக ஆரோனை அனுப்பும்படி மோசே தேவனிடம் வேண்டினான். | ஆபிரகாமுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் தேவன் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை சக்திவாய்ந்த எகிப்து தேசத்தால் தடுக்க முடியவில்லை. இந்தக் கடைசி வாதை எகிப்தின் அடிமைத்தனத்தை முடிவுக்கு கொண்டுவந்ததுஇ செங்கடல் வழியாக இஸ்ரவேலர்களை வனாந்தரத்தில் வழிநடத்தியது. இஸ்ரவேலர் மோசேயின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்ததுஇ அப்பொழுது அவர்கள் தேவனுடைய தீர்ப்பிலிருந்து தப்பி பாதுகாப்பாக இருப்பார்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கும்படி கேட்கப்பட்டபோதுஇ மோசே மற்றும் ஆரோன் தன்னிடம் கொண்டு வந்த தேவனுடைய வேண்டுகோளுக்குக் கீழ்ப்படிய பார்வோன் முரட்டுத்தனமாய் மறுக்கிறான். (5: 4)<br>2. பார்வோன் இஸ்ரவேல் புத்திரரின் வேலைச்சுமையை அதிகரித்ததன் மூலம் செங்கற்களை உருவாக்க வைக்கோலை அவர்களையே சேகரிக்கச் சொன்னான். (5: 6-7)<br>3. மோசே இந்த விஷயத்தைப் பற்றி கர்த்தரிடம் பேசினான்இ இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து விடுவிப்பதாக அவர் அவனுக்கு உறுதியளித்தார். (5: 22-23இ மற்றும் 6: 1)<br>4. யாத்திராகமம் 6: 6-8-ல்இ கர்த்தர் 7 முறை 'நான் செய்வேன்' என்று கூறிஇ யாத்திராகமம் 6: 2 ல் 'நான் கர்த்தர்' என்று சொன்னார். மோசேயும் ஆரோனும் அவருடைய வல்லமையையும் அவருடைய வாக்குறுதிகளையும் நம்ப வேண்டும் என்று அவர் விரும்பினார். எகிப்து தேசத்தில் 10 தண்டனைகளை (வாதைகளை) அனுப்புவதில் பார்வோன் தமது வல்லமையைக் காண்பான் என்பதையும் தேவன் உறுதிப்படுத்தினார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. நடந்த ஒன்பது வாதைகளில் காணப்பட்டபடி தேவனுடைய அற்புத வல்லமையைத் தொடர்ந்து புறக்கணித்தால் தேவன் என்ன செய்வார் என்று மோசேயும் ஆரோனும் எச்சரித்தார்கள். (சங்கீதம் 105: 26-36 ஐக் காண்க) இறுதி எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. (11: 4-6)<br>2. பஸ்கா பண்டிகை நியமிக்கப்பட்டுஇ ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை கதவின் இரண்டு பக்க நிலைக்கால்களிலும்இ தங்கள் வீடுகளின் மேல்சட்டங்களிலும் தெளிக்க இஸ்ரவேலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.<br>3. ஆட்டுக்குட்டியின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்; அது வீட்டில் இறக்கும் முதற்பேறான குழந்தைக்கு மாற்றாக ஒரு பலியாக இருந்தது. தலைச்சன் பிள்ளை சாகாதபடி பதிலுக்கு விலங்கு சாகவேண்டியிருந்தது. (12: 1-7)<br>4. இறுதியாக நள்ளிரவில் அடி விழுந்ததுஇ எகிப்தியரின் ஒவ்வொரு முதற்பேறான குழந்தையும் இறந்ததுஇ ஆனால் இஸ்ரவேல் குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர்இ ஏனெனில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசல் நிலைக்கால்களில் தெளிக்கப்பட்டிருந்தது. (12: 29-30) |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | தேவன் ஏற்கனவே மோசேயிடம் கூறியதைக் கவனியுங்கள்இ ஆனால் பார்வோன் நேரடியாகவே முடியாது என்று கூறும்போது மோசே தேவனுக்கு எவ்வாறு பதிலளித்தார்? | பஸ்கா எதைக் குறிக்கிறது என்பதை சிந்திக்க மாணவர்களை ஊக்குவிக்கவும்; இஸ்ரவேலருக்கு பதிலாக அப்பாவி இரத்தத்தின் பலி. இது வரப்போகிற இன்னும் பெரிய தியாகத்தின் அடையாளமாக இருப்பதையும் கவனியுங்கள். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. தேவன் எல்லாம் வல்ல தேவன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.<br>2. தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது மிகவும் கடுமையான விஷயம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நம்முடைய பாவத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்காக செலுத்தப்பட்ட பெரும் விலையை நாம் உணர்ந்திருக்கிறோமா? இயேசு இந்த விலையைச் செலுத்திஇ சிலுவையில் மரித்து நம்மை மீட்டுக்கொண்டார்? |

| | B10 - நிலை 3<br>பாடம் 1 - மோசே<br>தலைப்பு - பஸ்கா ஆட்டுக்குட்டி | B10 - நிலை 4<br>பாடம் 1 - மோசே<br>தலைப்பு - செங்கடல் வழியாக |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத் 12:1-14, 29-36, 50-51**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 12: 13**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. எகிப்தியர்களின் கீழ்ப்படியாமைக்காக தேவன் தமது தீர்ப்பைக் காட்டினார்இ இஸ்ரவேலரின் கீழ்ப்படிதலுக்காக அவர் அவர்களுக்கு கருணை காட்டினார்.<br>2. இயேசுவே கடைசி பலியும் நமது மீட்பருமாவார். | **தியானப் பகுதி: யாத் 13: 17-22, 14: 1-31**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 14: 13**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேலர் தேவனுடைய பாதுகாப்பையும் உதவியையும் சந்தேகித்தனர்.<br>2. தேவன் தம்முடைய மக்களை எகிப்தியர்களிடமிருந்து மீண்டும் மீட்பதன் மூலம் தம்முடைய வல்லமையையும் அன்பையும் நிரூபித்தார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | நாம் கொண்டாடும் சில விடுமுறைகளையும் மேலும் அவை எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றியும் சிந்திக்கும்படி மாணவர்களைக் கேளுங்கள் எ.கா. கிறிஸ்துமஸ்இ ஈஸ்டர். விடுமுறை என்பது தேவன் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்பதற்கான முக்கியமான நினைவூட்டலாக இருக்கும் என்பதை விளக்குங்கள். யூத நம்பிக்கையில் கொண்டாடப்படும் பஸ்கா பண்டிகை விடுமுறையைப் பற்றி அவர்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறார்களா என்று அவர்களிடம் கேளுங்கள். | மாணவர்கள் இதற்கு முன்பு செல்லாத ஒரு இடத்திற்கு நீண்ட பயணத்தை மேற்கொள்கிறார்கள் என்று கற்பனை செய்யச் சொல்லுங்கள். அவர்களுக்கு காட்ட ஏதாவது (வரைபடம்) அல்லது யாராவது தேவைப்படுவார்கள். வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்கான நீண்ட பயணத்தில் இஸ்ரவேலருக்கு இதுதான் தேவை. தேவன் அவர்களை ஒரு விசேஷ மான வழியில் வழிநடத்தினார். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. முந்தைய வாதைகளை மாணவர்களுடன் மீள்பார்வை செய்துஇ இந்த வாதை இறுதியானது மிக மோசமானது மேலும் மிகவும் அழிவு ஏற்படுத்தக்கூடியது என்பதை விளக்குங்கள். தேவன் பார்வோனை விட வல்லமைவாய்ந்தவர் என்பதைக் காட்டப் போகிறார்.<br>2. என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி மோசேக்கும் ஆரோனுக்கும் தேவன் மிகவும் விசேஷ அறிவுறுத்தல்களைக் கொடுத்தார். (வசனங்கள் 1-14)<br>3. இஸ்ரவேலர் எந்த குறைபாடும் இல்லாத ஒரு ஆட்டுக்குட்டியைக் கொன்றுஇ அதன் இரத்தத்தை தங்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக வீட்டு வாசல்களில் தெளிக்க வேண்டியிருந்தது.<br>4. ஆட்டுக்குட்டியின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்; வீட்டில் முதற்பேறான குழந்தை சாகாமலிருக்க இது ஒரு மாற்று பலியாகும்.<br>5. பஸ்கா ஒரு யூத விடுமுறை என்று விளக்குங்கள்இ ஒரு மிருகத்தை பலியிட்டவர்களின் வீடுகளை கர்த்தர் "கடந்து சென்றார்". வாசலில் ரத்தம் இல்லாத ஒவ்வொரு வீட்டிலும் முதற்பேறானவர்கள் கொல்லப்பட்டனர். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வழிநடத்தினார். பகலில் மேகத் தூணாலும்இ இரவு நேரத்தில் நெருப்புத் தூணாலும் அவர்களை வழிநடத்தினார். அவர் அவர்களுக்கு வழிகாட்டுவதும் அவர்களுக்கு உதவுவதும் அவர்களுக்குத் தெரியும். (13: 21-22)இ தேவன் தங்களுடன் இருக்கிறார் என்பதை அறிய சில நேரங்களில் இது போன்ற அடையாளங்களை மக்கள் விரும்புகிறார்கள் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.<br>2. எகிப்திலிருந்து விடுபட்டபோது இஸ்ரேலியர்கள் உணர்ந்திருக்க வேண்டிய விடுதலையைப் பற்றி சிந்தியுங்கள். அவர்களை திரும்பக் கொண்டுபோவதற்காக பார்வோனின் இராணுவம் அவர்களைத் துரத்துகிறது என்று அவர்கள் கேள்விப்பட்டபோது இந்த நிவாரணம் எவ்வாறு பயமாக மாறியிருக்கும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்! (14: 10)<br>3. இஸ்ரவேலர் பீதியடைய ஆரம்பித்தார்கள்இ இதற்காக தேவனைக் குறைகூறி கோபப்பட ஆரம்பித்தார்கள். ஆனால்இ அமைதியாக இருக்க மோசே அவர்களுக்கு நினைவூட்டினான். |
| மீள்பார்வை செய்யுங்கள் | பல வருட அடிமைத்தனத்திற்குப் பிறகுஇ தேவனிடம் கூக்குரலிட்டபின்இ பல வாதைகளுக்குப் பிறகும் பார்வோன் தேவனுக்குச் செவிசாய்க்க மறுத்தபின்இ இஸ்ரவேல் மக்கள் இறுதியாக விடுதலையானார்கள்! | பாடத்தை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக இன்றைய ஆய்வில் படித்ததை மாணவர்களிடம் வினாடி வினா முறையில் கேளுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நம்முடைய பாவத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்காக செலுத்தப்பட்ட மாபெரும் விலையை நாம் உணர்ந்திருக்கிறோமா? இயேசு இந்த விலையைச் செலுத்திஇ சிலுவையில் மரித்து நம்மை மீட்டுக்கொண்டார். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>காரியங்கள் நமது வழியில் செல்லாதபோது அல்லது நாம் எதிர்பார்க்கிறபடி நடக்காதபோதுஇ நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம்? |

| | B10 - நிலை 3<br>பாடம் 2 - மோசே<br>தலைப்பு - செங்கடல் | B10 - நிலை 4<br>பாடம் 2 - மோசே<br>தலைப்பு - சீனாய் மலைமீது |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத் 13:20-22, 14:5-15, 19-31**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 14: 14**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் தேர்ந்தெடுக்கப்பட்ட தமது மக்களை எகிப்திலிருந்து காப்பாற்றினார்.<br>2. இஸ்ரவேலர் தேவனையும் அவர்கள்மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும் சந்தேகிக்கத் தொடங்கினர்<br>3.தேவன் அவர்களுடன் இருந்தார்இ அவர்களை வழிநடத்தி பாதுகாத்தார்.. | **தியானப் பகுதி: யாத் 19:1-13, 16-25, 20:1-21**<br>**முக்கிய வசனம்: யாத் 19:5, 20: 20**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் பரிசுத்தமானவர்இ வல்லமையுள்ளவர்.<br>2. இஸ்ரவேலர்களால் அணுகமுடியாத தேவனை எளிதில் அணுகக்கூடிய பாக்கியம் நமக்கு இருக்கிறது.<br>3. எப்படி வாழ வேண்டும் என்று தேவன் இஸ்ரவேலருக்கு அறிவுறுத்தினார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | 430 ஆண்டுகள் எகிப்தில் அடிமைத்தனத்தில் கழித்த பின்னர் இப்போது சுதந்திரமாக இருக்கும் இஸ்ரவேலர் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதைக் கவனியுங்கள். இந்த நேரத்தில் இஸ்ரவேலர்கள் என்ன நினைத்திருப்பார்கள் என்று மாணவர்களிடம் கேளுங்கள். | அன்றாட சூழ்நிலைகளில் நாம் பின்பற்றும் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பற்றி சிந்தியுங்கள் எ.கா. உபகரணங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த கையேடுஇ ஏதாவது சமைக்க ஒரு செய்முறை. இந்த வழிகாட்டுதல்கள் பொதுவாக நமக்கு உதவுவதற்காக உள்ளன. இஸ்ரவேல் மக்களுக்காக மோசே தேவனிடமிருந்து பெற்ற பத்து கட்டளைகளும் அவ்வாறே இருந்தன. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கடைசியில் இஸ்ரவேலர் சுதந்திரமாக இருந்தார்கள்இ எகிப்திலிருந்து தொலைவிலிருந்த வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குச் சென்றார்கள்! அடிமைத்தனத்திலிருந்து விடுபட அவர்கள் எவ்வளவு உற்சாகமாக இருந்திருப்பார்கள் என்பதைச் சிந்தியுங்கள்!<br>2. தேவன் இஸ்ரவேலரை பகலில் மேகத் தூணிலும் இரவில் நெருப்புத் தூணிலும் வழிநடத்தினார். (13: 21-22) இது அவர் எப்போதும் அவர்களுடன் இருப்பதையும் அவர்களுக்கு வழிகாட்டுவதையும் அவர்களுக்குக் காட்டியது. இன்று தேவன் நம்முடன் இருக்கிறார் என்பதற்கான காணக்கூடிய அறிகுறிகள் நமக்கு இருக்க வேண்டும் என்று பெரும்பாலும் விரும்புகிறோம். ஆனால் அவர் பைபிள் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் நமக்கு வழிகாட்டவும் உதவவும் முடியும்.<br>3. மோசே இந்தச் சூழ்நிலையில் அமைதியாகவும் நேர்மறையாகவும் இருந்தான்இ தேவன் அவர்களுக்காக போராடுவார் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்துகிறான். (14: 14) | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. அவர் இப்போது வரவிருக்கும் விஷயங்களுக்கு அவர்களைத் தயார்படுத்துகிறார்.<br>2. தேவன் மோசேயிடம் அவர் தேர்ந்தெடுத்த மக்கள் எப்படி இருக்கிறார்கள்இ அவர்கள் எப்படி அவருடைய பொக்கிஷமான உடைமையாக இருப்பார்கள் என்று சொல்லுங்கள். (19: 5-6) தங்களைத் தாங்களே சுத்திகரிக்கும்படி அவர் சொல்கிறார். சுத்திகரித்தல் என்றால் என்ன என்பதை விளக்குங்கள் - வேறுபாடுள்ளவர்களாக இருப்பதும்இ தேவனைச் சந்திக்க அவர்களை உடல் ரீதியாகவும் ஆத்தும ரீதியாகவும் தயார்படுத்துதல்.<br>3. மலை புனிதமாக இருந்ததால் இஸ்ரவேலர்கள் அதைத் தொடக்கூட முடியவில்லை. தேவனுடைய வல்லமையும் பரிசுத்தமும் மிகவும் வலிமையானவைஇ மக்கள் அவருக்கு அருகில் வரமுடியவில்லை. (19: 10-13) கர்த்தராகிய இயேசு செய்த எல்லாவற்றின் நிமித்தம் நாம் இந்த பரிசுத்தஇ வல்லமைவாய்ந்த தேவனை இப்போது சுதந்திரத்துடன் அணுகுவது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்த கதையை ஒரு காமிக் போல உருவாக்கவும்; தேவன் இஸ்ரவேலரை வழிநடத்துகிறார்இ எகிப்தியர்கள் தங்களைத் துரத்துகிறார்கள் என்று உணர்ந்த இஸ்ரவேலர்இ பின்னர் தேவன் அவர்களை எவ்வாறு காப்பாற்றுகிறார் ஆகியவை. | பத்து கட்டளைகளைப் பட்டியலிட்டு ஒவ்வொன்றையும் விவாதிக்குமாறு மாணவர்களைக் கேட்டு பாடத்தை மீள்பார்வை செய்யவும். கட்டளைகளை நம் சொந்த வாழ்க்கையில் எவ்வாறு கடைப்பிடிக்கலாம்? |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நம் வாழ்க்கையில் மோசமான காரியங்கள் நடக்கும்போது அவர் அங்கு இல்லை அல்லது நமக்கு உதவ தயாராக இல்லை என்று சொல்லி நாம் தேவனைக் குறை கூறுகிறோம். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நம்முடைய பாவத்தை அவர்மீது எடுத்துக்கொண்டதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்இ இதனால் நாம் தேவனுடைய பார்வையில் பரிசுத்தமாக இருப்போம். |

| | B10 - நிலை 3<br>பாடம் 3 - மோசே<br>தலைப்பு - கடினமான பயணம் | B10 - நிலை 4<br>பாடம் 3 - மோசே<br>தலைப்பு - அக்கினியிலிருந்து |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத்திராகமம் 17: 1-16**<br>**முக்கிய வசனம்: 1 பேதுரு 5: 7**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேலர் தொடர்ந்து தேவனை சந்தேகிக்கிறார்கள்.<br>2. தேவன் ஒருபோதும் அவர்களைக் கைவிடவில்லைஇ அவர்களுக்காக தொடர்ந்து பராமரிக்கிறார்இ அவர்களுக்காக போராடுகிறார். | **தியானப் பகுதி: யாத்திராகமம் 32: 1-35**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 32: 26, 33**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேல் மக்கள் விரைவில் தேவனுடைய கட்டளைகளை மறந்துவிட்டார்கள்.<br>2. தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு இரக்கம் காட்டினார்இ அவரைப் பின்பற்றாதவர்களுக்கு தண்டனை வழங்கினார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | இஸ்ரவேலர் எவ்வளவு தூரம் வந்தார்கள்இ தேவன் அவர்களை எவ்வாறு பராமரித்தார் என்பதைப் பாருங்கள்; எகிப்தில் ஏற்பட்ட வாதைகள்இ செங்கடல் இரண்டாகப் பிளத்தல். இந்தத் தருணத்தில் இஸ்ரவேலர் தேவனை நோக்கி எப்படி உணர்ந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி மாணவர்களைச் சிந்திக்கச் சொல்லுங்கள். | தங்களுக்குத் தவறு என்று தெரிந்த ஒன்றைச் செய்துவிட்ட ஒரு சூழ்நிலையைப் பற்றி மாணவர்களைச் சிந்திக்கச் சொல்லுங்கள். நாம் ஏன் அடிக்கடி ஆம் என்று சொல்லிஇ இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கூட்டத்தைப் பின்பற்றுகிறோம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இந்தக் கதையில்இ நாம் ஆரோனைப் போல அல்லஇ மோசேயைப் போல இருக்க வேண்டும்இ தேவனுடைய வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை தெரிந்துகொள்கிறோம். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. கர்த்தருடைய கட்டளைகளைப் பின்பற்றி இஸ்ரவேலர் மீண்டும் முன்னேறினார்கள். ஆனால் அவர்கள் பயணத்தில் குடிக்க எங்கும் தண்ணீர் இல்லை. எனவே அவர்கள் மீண்டும் புகார் செய்யத் தொடங்குகிறார்கள். (17: 2-3)<br>2. அவர்கள் முணுமுணுத்த போதிலும்இ தேவன் கருணையுடன் செயல்படுகிறார்இ மேலும் அவர்களுக்கு ஒரு பாறையிலிருந்து தண்ணீரை வழங்குகிறார் - அவர் அவர்களைக் கைவிடாமல் ஒரு அதிசயத்தைச் செய்கிறார்! (17: 5-6)<br>3. அன்றைய போரில் இஸ்ரவேலர் வெற்றி பெற்றனர் - இந்த எதிரியைத் தோற்கடிக்க தேவன் அவர்களுக்கு உதவினார். தேவன் இஸ்ரவேல் மக்களை மோசே மூலம் வழிநடத்துவார் என்பதையும் இது காட்டுகிறது.<br>4. அமலேக்கியர்கள் அவர்களைத் தாக்குவதால் அவர்களின் பிரச்சினைகள் முடிந்துவிடவில்லை! (17: 8) இந்த மக்களினம் தீயதுஇ சந்தோஷத்திற்காகப் பிறரை கொலைசெய்யும் ஆபத்தான மனிதர்கள் என்று அறியப்பட்டது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. சீனாய் மலையிலிருந்து மோசே திரும்பி வர இஸ்ரவேல் மக்கள் காத்திருக்க பொறுமையின்றி இருந்தனர். அவர்கள் காரியங்களை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டுஇ தங்களுக்கென்று ஒரு தெய்வத்தை உருவாக்க விரும்பினர். அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய தேவனுடைய தலைமையை தள்ளி தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு தவறான சிலையை ஏற்கிறார்கள்.<br>2. என்ன நடக்கிறது என்று தேவன் கண்டபோதுஇ கீழ்ப்படியாமையால் முழு தேசத்தையும் அழிக்க அவர் தயாராக இருந்தார் (32: 10) ஆனால் மோசே இதைச் செய்ய வேண்டாம் என்று தேவனிடம் மன்றாடினான். தேவன் இங்கே கிருபை காட்டுகிறார். (32: 11-14) கிருபையின் வரையறையை விளக்குங்கள் (தகுதியான தண்டனையிலிருந்து காப்பாற்றுவது).<br>3. மோசே மலையிலிருந்து திரும்பிச் சென்றுஇ மக்கள்மீது மிகுந்த கோபமடைந்தான்இ அவர்கள் தேவனுடைய சட்டங்களை மீறிவிட்டார்கள் என்பதைக் காட்டுவதற்காகஇ பத்து கட்டளைகளை அவர்களுக்கு முன்னால் உடைத்தான். (32: 19) ஆனாலும் தேவன் மக்களிடம் கோபமாக இருந்தார். |
| மீள்பார்வை செய்யுங்கள் | முக்கிய வசனத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்இ அதை எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவர முடியும் என்று குழுவுடன் விவாதிக்கவும். | 1 யோவான் 5: 21 ஐத் பாருங்கள்இ நம்முடைய இருதயங்களில் தேவனுடைய இடத்தை எந்த வகையான ”சிலைகள்” எடுக்கக்கூடும் என்று சிந்தியுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>ஆரோனும் ஊரும் மோசேயின் கைகளைத் அவனது தலைக்கு மேலே வைத்திருக்க உதவியது பற்றி சிந்தியுங்கள் - அவர்கள் அவனை ஊக்குவித்து ஆதரித்தார்கள். மற்றவர்களுக்கு உதவுவதில் இன்று நாம் எப்படி இருக்க முடியும்? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>அடிக்கடி நாம் தவறுகளைச் செய்து தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர்க்கலாம். ஆனால் மன்னிக்கும்படி தேவனிடம் கேட்பதன் மூலம் நாம் மன்னிப்பைப் பெற முடியும். |

| | B10 - நிலை 3<br>பாடம் 4 - மோசே<br>தலைப்பு வெண்கல சர்ப்பம் | B10 - நிலை 4<br>பாடம் 4 - மோசே<br>தலைப்பு - பாலைவனத்தில் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: எண் 21:4-9, யோ 3:1-2, 14-16**<br>**முக்கிய வசனம்: யோவான் 3: 14**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேலர் மீண்டும் தேவனிடம் முறையிட்டனர்.<br>2. தேவன் அவர்களை தண்டிக்க வேண்டியிருந்தது - ஆனால் அவர்களுடைய தண்டனையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக அவர் ஒரு வழியை ஏற்பாடுசெய்தார்.<br>3. இது நம்முடைய பாவங்களுக்காக இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்ட எதிர்கால நிகழ்வின் படமாகும். | **தியானப் பகுதி: எண்ணாகமம் 21: 1-9**<br>**முக்கிய வசனம்: யோவான் 3: 14, 15**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் இதுவரை கவனித்துஇ அவர்களைப் பராமரித்ததை இஸ்ரவேலர் மிக விரைவில் மறந்துவிட்டார்கள்.<br>2. அவரை நம்பாமல் இஸ்ரவேல் மக்கள் எப்படி பாவம் செய்கிறார்கள் என்பதை தேவன் அவர்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | எதற்காவது காத்திருக்கும்போது பொறுமையிழந்தது அல்லது ஒருவரளித்த வாக்குறுதிக்காக காத்துக்கொண்டிருந்த நேரத்தைப் பற்றி மாணவர்களைச் சிந்திக்கச் சொல்லுங்கள். இஸ்ரவேலர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தைத் தருவதாக முன்பே தேவன் வாக்குறுதி அளித்திருந்தார்இ ஆனால் அவர்கள் அங்கு சென்றுசேர்வதில் அவர்கள் பொறுமையிழந்து காணப்பட்டார்கள் என்பதை விளக்குங்கள். | நீண்ட பயணம் மேற்கொள்வதைப் பற்றி சிந்தியுங்கள். பெரும்பாலும்இ மக்கள் பயணத்தில் பொறுமையிழப்பார்கள்இ குறிப்பாக குழந்தைகளால் சோர்வடையலாம். சில நேரங்களில்இ அவர்கள் சீக்கிரமே அங்கு சென்றிருக்க வேண்டும் என விரும்புகிறார்கள். இவ்வாறுதான் இஸ்ரவேலர் தேவன் சொன்ன வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சென்றடைவதைப் பற்றி உணர்ந்தார்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேலர் இப்போது கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக பாலைவனத்தில் இருந்துஇ விரக்தியடைந்துள்ளனர். அவர்கள் மீண்டும் தேவனிடம் புகார் செய்யத் தொடங்கினர் - “இங்கே இறப்பதற்காகவா எங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்தீர்கள்?!” (எண்ணாகமம் 21: 4)<br>2. ஆகவேஇ தேவன் தம்மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் கோபப்படுகிறார். அவர் அவர்களிடையே விஷ பாம்புகளை அனுப்புகிறார்இ பலர் இறந்தனர். ஆனால் மோசே மன்னிப்புக்காக மக்கள் சார்பாக தேவனிடம் ஜெபம் செய்தான். (21: 7)<br>3. தேவன் மோசேயை ஒரு கம்பத்தில் வெண்கல சர்ப்பத்தை உருவாக்கச் சொன்னார்இ இந்த சர்ப்பத்தைப் பார்த்த யாவரும் குணமடைந்தார்கள்.<br>4. இஸ்ரவேலருக்கு இது இன்னும் தெரியாதுஇ ஆனால் கம்பத்திலிருந்த இந்த சர்ப்பத்துக்கு ஒரு பெரிய அர்த்தம் இருந்தது. இந்த சர்ப்பத்தைப் பார்த்து இஸ்ரவேலர் எவ்வாறு குணமடைந்தார்கள் என்பதை யோவான் 3-ல் இயேசு விளக்குகிறார்இ | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேலர் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக பாலைவனத்தில் அலைந்து கொண்டிருந்தார்கள்இ பொறுமையிழந்து காணப்பட்டார்கள். இந்த வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தை தருவதாக தேவன் அவர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார்இ ஆனால் அது இதுவரை காணப்படவில்லை. ஆகவேஇ தேவன் அவர்களை எவ்வளவு தூ ரம் கொண்டுவந்தார் என்பதை நினைவில் கொள்வதற்குப் பதிலாகஇ அவர்கள் தங்கள் நிலைமையைப் பற்றி தேவனிடம் முறையிட்டார்கள். (எண்ணாகமம் 21: 4-6)<br>2. இதற்கு முன்இ அவர்கள் பல ஆபத்தான சூழ்நிலைகளில் இருந்தார்கள்இ அவர்களுடைய விசுவாசமின்மையும் தொடர்ந்து முறையிடுதலும் இருந்தபோதிலும் அவர்களைப் பராமரித்து அவர்களோடு இருந்தார்.<br>3. ஆகவேஇ வெண்கல சர்ப்பத்தை ஒரு கம்பத்தில் வைக்கும்படி தேவன் கட்டளையிட்டார்இ அதைப் பார்ப்பவர்கள் வாழ்வார்கள். இந்த சர்ப்பத்தை பார்ப்பதன் மூலம்இ தேவன் இந்த தீர்ப்பை அனுப்பியுள்ளார் என்பதையும்இ தேவனால் மட்டுமே தண்டனையை மாற்றி காப்பாற்ற முடியும் என்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | யோவான் 3: 16 என்ற நன்கு அறியப்பட்ட வசனத்தைப் பார்க்கவும்இ நித்திய ஜீவனின் பொருளைக் கருத்தில் கொள்ள மாணவர்களைக் கேளுங்கள். | சிறிய குழுக்களாகஇ சங்கீதம் 78: 10-38-ஐப் படித்துஇ தேவன் தம் மக்களுக்காகச் செய்த அதிசயங்கள் அனைத்தையும் மேலும் அவைகளுக்கு அவர்களுடைய மனோபாவம் எப்படியிருந்தது என்பதையும் பட்டியலிடுங்கள். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>இஸ்ரவேலர் தேவனை நம்பவில்லைஇ அவர்கள் அவருடைய சட்டத்திற்குக் கீழ்ப்படியவில்லைஇ ஏனெனில் அவர் அவர்களுக்காக ஏற்கனவே செய்த அனைத்தையும் அவர்கள் மறந்துவிட்டார்கள். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>இதுவரை அவர் அவர்களை கைவிடாதிருந்தும்கூட இஸ்ரவேல் மக்கள் தங்களின் தற்போதைய நிலைமை குறித்து தேவனிடம் முறையிட்டார்கள். ஆகவேஇ நாமும் அடிக்கடி இப்படியிருக்க முடியும். |

| | B11 - நிலை 3<br>பாடம் 1 - மோசே<br>தலைப்பு - தேவனைச் சந்தித்தல் | B11 - நிலை 4<br>பாடம் 1 - நியாயப்பிரமாணம்<br>தலைப்பு - “ஒரே தேவன்” |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத்திராகமம் 19: 1-14**<br>**முக்கிய வசனம்: 1 பேதுரு 1: 16**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் பரிசுத்தர்இ பரிபூரணர்.<br>2. தேவனுடனான நமது உறவில் கீழ்ப்படிதல் மிகவும் முக்கியமானது.<br>3. தேவனுடைய சட்டங்கள் அவருடைய மக்களின் பாவத்தை வெளிப்படுத்துகின்றன. | **தியானப் பகுதி: யாத் 19:16-25, 20: 1-7, மத் 22:34-40 முக்கிய வசனம்: மத்தேயு 22:37**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் பரிசுத்த தேவன்.<br>2. தேவன் வல்லமையுள்ள தேவன்.<br>3. தேவன் எரிச்சலுள்ள தேவன்.<br>4. தேவன் அன்பான தேவன். |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | மாணவர்கள் ஒரு திருமணத்திற்குச் செல்வதாக இருந்தால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்திக்கச் சொல்லுங்கள்இ அதாவது துணிகளைத் துவைத்துஇ நன்கு குளித்து அந்த சிறந்த நாளுக்காக அவர்கள் உடையணிந்து மிகவும் சுத்தமாக இருக்கிறார்கள்! தேவனைச் சந்திக்கத் தயாராவதற்கு இஸ்ரவேல் மக்கள் இதை எவ்வாறு செய்ய வேண்டியிருந்தது என்பதை விளக்குங்கள்இ ஏனென்றால் அவர் பரிபூரணர்இ பாவம் இல்லாதவர்இ இஸ்ரவேல் மக்களோ அடிக்கடி பாவம் செய்தார்கள். | இந்த ஆய்வில்இ இஸ்ரவேல் மக்களுக்கு அவரைத் தவிர வேறு தெய்வங்கள் அல்லது சிலைகள் இருக்கக்கூடாது என்று தேவன் எவ்வாறு கட்டளையிட்டார் என்பதை நாம் பரிசீலிப்போம். நமக்கும் தேவனுக்கும் இடையில் ஏதாவது வந்தால்இ அது ஒரு சிலை. இன்றைய சமுதாயத்தில் சிலைகள் அல்லது தெய்வங்களின் எடுத்துக்காட்டுகளைப் பற்றி யோசித்துஇ தேவனுடைய இடத்தை அவைகள் எவ்வாறு எடுக்க முடியும் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவனைச் சந்திக்க மோசே மட்டுமே மலைக்குச் செல்ல முடிந்தது. தேவனுடைய பிரசன்னம் மிகவும் வல்லமைவாய்ந்ததாகவும் பரிசுத்தமாகவும் இருந்ததுஇ இதனால் இஸ்ரவேல் மக்கள் அவரிடம் செல்ல முடியவில்லை.<br>2. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை மீட்பதற்கு தேவனுக்கு ஒரு காரணம் இருந்ததுஇ அவர் இப்போது அதை அவர்களிடம் சொன்னார். அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இஸ்ரேல் ஒரு பரிசுத்த தேசமாக மாற வேண்டும்இ அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு மக்களாய்த் திகழ வேண்டும் என தேவன் விரும்பினார். (வசனங்கள் 5-6)<br>3. கர்த்தருடைய கட்டளைகளைக் கேட்டபோது மக்கள் கர்த்தர் சொன்னதையெல்லாம் செய்வோம் என்று பதிலளித்தார்கள். (வசனம் 8)<br>4. தேவனைச் சந்திக்க அவர்கள் ஏன் தயாராக வேண்டும் என்பதைப் பார்க்க முக்கிய வசனத்தைப் பாருங்கள். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேலர் சீனாய் மலைக்கு அழைத்து வரப்பட்டுஇ தேவனைச் சந்திக்கத் தயாராக இருந்தார்கள். தேவன் மிகவும் பரிசுத்தர்இ அவர்கள் தங்களை வெளிப்புறமாக முடிந்தவரை தூய்மையாக்க முயற்சிக்க வேண்டியிருந்தது. (19: 14)<br>2. தேவன் நெருப்பு வடிவத்தில் பரலோகத்திலிருந்து இறங்கினார் - இஸ்ரவேல் மக்கள் அவருடைய வல்லமையின் கீழ் பயத்துடன் நடுங்கினர். (19: 16-18)<br>3. தேவன் தம்மைத் தவிர வேறு தேவன் இருக்கக்கூடாது என்று மக்களுக்கு சொன்னார். (20: 3) மற்ற தெய்வங்களையோ விக்கிரகங்களையோ வணங்க வேண்டாம் என்றும் அவர் சொன்னார். அவர் நம்முடைய அன்பிற்காக வைராக்கியம் கொண்ட தேவன்இ அவரை நேசிப்பவர்களுக்கும் அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்கும் அவர் மாறாத அன்பை உறுதியளிக்கிறார். (20: 5-6) |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | சீனாய் மலை எவ்வாறு ஒரு புனித இடம் என்பதை மாணவர்களுடன் சிந்தியுங்கள். இங்கே தேவன் மோசேயுடன் எரியும் முட்புதரில் பேசினார் (யாத்திராகமம் 3: 1-12). எலியா தனது உயிருக்கு பயந்து ஓடிவந்தபோது தேவன் அவரிடம் மெல்லிய குரலில் பேசினார். | முக்கிய வசனத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்இ இந்த வசனம் இன்றைய ஆய்வை எவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறது. ஆய்வு 1ஐ முடிக்க உதவும் கேள்விகளைக் கேளுங்கள். |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>தேவன் மிகவும் பரிசுத்தமானவர்இ பரிபூரணர்இ நாம் மிகவும் பாவமுள்ளவர்களும் அசுத்தமானவர்களுமாய் இருக்கிறோம்இ அவரிடம் வர நமக்கு ஒரு வழி தேவை. | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>மாணவர்களின் வாழ்க்கையில் தேவனுக்குரிய இடத்தை வேறு ஏதாவது பிடிக்கிறதா அல்லது தேவனை விட அவர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறதா என்று பரிசீலிக்கச் சொல்லுங்கள். அவர்கள் அதன் முக்கியத்துவத்தை மீள்பார்வை செய்ய வேண்டியுள்ளது. |

| | B11 - நிலை 3<br>பாடம் 2 - மோசே<br>தலைப்பு - தேவனை அறிதல் | B11 - நிலை 4<br>பாடம் 2 - நியாயப்பிரமாணம்<br>தலைப்பு - “தேவனுடைய வழி” |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத்திராகமம் 20: 1-12**<br>**முக்கிய வசனம்: மத்தேயு 22: 37**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.தேவன் உண்மையான ஒரே தேவன்.<br>2.தேவனின் பெயர் சிறப்புவாய்ந்ததுஇ அதை மதிக்க வேண்டும்.<br>3.ஞாயிற்றுக்கிழமைகளை சிறப்பு ஓய்வு நாளாக கடைபிடிக்க வேண்டும்.<br>4.நமது தாய் தந்தையை கனம்பண்ணுவது முக்கியம். | **தியானப் பகுதி: யாத் 20:8-11, லூக் 13:10-17**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 20: 8**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.நாம் ஓய்வுநாளை பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.<br>2.சட்டங்களைக் கடைப்பிடிப்பது மக்களை நேசிப்பதிலிருந்து நம்மைத் தடுக்கக்கூடாது. |
| **அறிமுகப்படுத்-துங்கள்** | விதிகள் ஒரு நல்ல விஷயமாக காணப்படும் அன்றாட சூழ்நிலைகளைப் பற்றி சிந்தியுங்கள். எ.கா. விளையாடுவதில்இ குழந்தைகளை சூடானதைத் தொடுவதில் பெற்றோர்கள் தடுப்பதுஇ போக்குவரத்து விளக்கு சிக்னல்கள்இ படுக்கை நேரங்கள்இ பள்ளிக்குச் செல்வது போன்றவை. இஸ்ரவேல் மக்களை தம்முடைய பரிசுத்த மக்களாக மாற்ற தேவன் எவ்வாறு விதிகளைத் தந்தார் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள் - பத்து கட்டளைகள். | விதிகள் ஒரு நல்ல விஷயமாக காணப்படும் அன்றாட சூழ்நிலைகளைப் பற்றி சிந்தியுங்கள். எ.கா. விளையாடுவதில்இ குழந்தைகளை சூடானதைத் தொடுவதில் பெற்றோர்கள் தடுப்பதுஇ போக்குவரத்து விளக்கு சிக்னல்கள்இ படுக்கை நேரங்கள்இ பள்ளிக்குச் செல்வது போன்றவை. இஸ்ரவேல் மக்களை தம்முடைய பரிசுத்த மக்களாக மாற்ற தேவன் எவ்வாறு விதிகளைத் தந்தார் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள் - பத்து கட்டளைகள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவன் கொடுத்த முதல் கட்டளை (1-3 வசனங்கள்) அவரைத் தவிர வேறு தெய்வங்களையோ சிலைகளையோ கொண்டிருக்கக்கூடாது. ஒரு சிலை என்பது நம் வாழ்வில் தேவனுடைய இடத்தைப் பிடிக்கும் எதையும் குறிக்கிறது. தேவனுக்கு முதலிடம் கொடுப்பது மிகவும் முக்கியமானது; இதனால்தான் இந்த முதல் கட்டளை. இதை மத்தேயு 4: 10 ல் இயேசுவே உறுதிப்படுத்தினார்.<br>2. இரண்டாவது கட்டளை (வசனம் 4) வேறு எந்த சிலைகளையும் செய்யக்கூடாது. இது எளிதானது என்று தோன்றலாம்இ ஆனால் இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து வந்திருக்கிறார்கள்இ அங்கு பல சிலைகளும் தேவன்களும் இருந்திருக்கும். லூக்கா 16: 13 ல் இயேசு இந்த கட்டளையை வலியுறுத்துகிறார்.<br>3. மூன்றாவது கட்டளை (வசனம் 7) நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை தவறாகப் பயன்படுத்தக்கூடாது. தேவனுடைய பெயர் சிறப்பானது மேலும் அதை தவறாக பயன்படுத்தப்படக்கூடாது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இஸ்ரவேலர்களுக்கான பத்து கட்டளைகளில் ஒன்றுஇ ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதும்இ அதை தேவனுக்கு அர்ப்பணித்து பரிசுத்தமாக வைத்திருப்பதும் ஆகும். (யாத்திராகமம் 20: 8-11)<br>2. தேவன் ஆறு நாட்களில் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி ஏழாம் நாளன்று ஓய்வெடுத்தார். அவ்வாறே செய்யும்படி அவர் நம்மை ஊக்குவிக்கிறார்இ வாரத்தில் ஒரு நாள் மற்றவற்றிலிருந்து வித்தியாசமாக இருக்க வேண்டும்இ அவருடைய சிருஷ்டியாகிய நாம் ஓய்வெடுக்கவும் அவரை ஆராதிக்கவும் அந்நாளை ஒதுக்கியுள்ளார்.<br>3. தேவன் ஏற்கனவே இஸ்ரவேலர்களுடன் மன்னாவைச் சேகரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் மூலம் இந்த மாதிரியை உருவாக்கத் தொடங்கினார். (யாத்திராகமம் 16: 22-26)<br>4. இயேசு பூமியில் இருந்தபோதுஇ இந்த கட்டளையை அவர் கடைப்பிடித்ததில் மக்கள் மகிழ்ச்சியடையவில்லை. அவர் ஓய்வுநாளில் மக்களை குணப்படுத்தியபோது இந்த கட்டளையை மீறியதாக அவர்கள் குற்றம் சாட்டினர். |
| **மீள்பார்வை செய்யுங்கள்** | மத்தேயு 22: 37-40 ஐப் பார்த்துஇ இந்த வசனங்கள் பத்து கட்டளைகளை எவ்வாறு சுருக்கமாகக் கூறலாம் என்பதைப் பற்றி விவாதிக்கவும். பாடம் 2 ஐ முடிக்க மாணவர்களுக்கு உதவ கேள்விகளைக் கேளுங்கள். | ஓய்வுநாளை பரிசுத்தமாக வைத்திருத்தல் மற்றும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருத்தல் என்ற தலைப்பில் குழு விவாதம் நடத்துங்கள்; “ஆதரவாக” மற்றும் “எதிராக” இரண்டு குழுக்கள் பேசட்டும்.. |
| **வாழ்ந்து காட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நாம் மற்ற தேவர்களையோ சிலைகளையோ தேவனுக்கு முன்பாக வைக்கிறோமா? பிற விஷயங்கள் எ.கா. விளையாட்டுஇ டிவிஇ வேலை போன்றவை தேவனுடைய இடத்தைப் பிடிக்காதிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1.நம்மில் எவரும் எல்லாக் கட்டளைகளை கடைப்பிடிக்க முடியாது; நாம் பாவிகள்இ தேவனுடைய தரத்தை அடைய முடியாது. (ரோமர் 3: 23) 2. இந்தக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க முயற்சிப்பதன் மூலம் நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. |

| | B11 - நிலை 3<br>பாடம் 3 - மோசே<br>தலைப்பு - தேவனுக்குக் கீழ்ப்படிதல் | B11 - நிலை 4<br>பாடம் 3 - நியாயப்பிரமாணம்<br>தலைப்பு - "தேவனுக்கு முதலிடம்" |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத் 20:13-21; மத் 19:16-30 முக்கிய வசனம்: மத்தேயு 19: 21**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவன் இந்த கட்டளைகளை கீழ்ப்படியக் கொடுத்தார்.<br>2 .இந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம்இ நமக்கு நித்திய ஜீவன் கிடைக்கும் என்று அர்த்தமல்ல.<br>3. நாம் சில சமயங்களில் தேவனைவிட நம் வாழ்வில் மற்ற விஷயங்களை முன்பாக வைக்கக்கூடும். | **தியானப் பகுதி: யாத் 20:12-21, மாற்கு 10: 17-31 முக்கிய வசனம்: மத்தேயு 6: 24**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1.கட்டளைகளும் சட்டங்களும் முக்கியம்இ அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.<br>2.கட்டளைகளும் சட்டங்களும் மட்டுமே தேவனுடனான உறவையோ அல்லது நித்திய ஜீவனையோ ஏற்படுத்தாது. |
| அறிமுகப்படுத்-துங்கள் | பள்ளியில் விதிகளை எவ்வாறு கடைப்பிடிக்க முயற்சிக்கிறோம் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்இ ஆனால் சில நேரங்களில் அவற்றை மறந்து மீறுகிறோம். எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். நாம் மனிதர்களாகவும் பாவிகளாகவும் இருப்பதால் தேவனைப் போல பரிபூரணமாக இருக்க முடியாது என்பதே இதற்குக் காரணம் என்று விளக்குங்கள். | பள்ளியில் விதிகளை எவ்வாறு கடைப்பிடிக்க முயற்சிக்கிறோம் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்இ ஆனால் சில நேரங்களில் அவற்றை மறந்து மீறுகிறோம். எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். நாம் மனிதர்களாகவும் பாவிகளாகவும் இருப்பதால் தேவனைப் போல பரிபூரணமாக இருக்க முடியாது என்பதே இதற்குக் காரணம் என்று விளக்குங்கள். நாம் செய்யும் காரியங்களால் நாம் பரலோகத்திற்குச் செல்ல முடியாது. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஆறாவது கட்டளை கொலை செய்யாதிருப்பது. கொலைக்கு இயேசுவின் புதிய வரையறையைப் பார்க்க மத்தேயு 5: 21-22 ஐ பாருங்கள். இன்று நாம் மக்களை எவ்வாறு நடத்துகிறோம் என்பதை இது எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கவனியுங்கள்.<br>2. எட்டாவது கட்டளை திருடக்கூடாது. புதிய ஏற்பாட்டில்இ இயேசு இதை மறுவரையறை செய்துஇ யாராவது உங்கள் சட்டையைத் திருடினால்இ அவர்களுக்கு உங்கள் அங்கியையும் கொடுங்கள் என்று கூறுகிறார்! (மத்தேயு 5: 40)<br>3. ஒன்பதாவது கட்டளை உங்கள் அயலவருக்கு எதிராக தவறாக சாட்சியமளிக்கக் கூடாது. இது வேறொருவர் செய்ததைப் பற்றி பொய் சொல்வது அல்லது முழு கதையின் ஒரு பகுதியை விட்டுவிடுவது என்று மாணவர்களுக்கு விளக்குங்கள். இந்த விஷயத்தில் இயேசு என்ன சொன்னார் என்பதைப் பார்க்க மத்தேயு 12: 36 ஐ பாருங்கள்.<br>4. ஏழாவது கட்டளை விபச்சாரம் செய்யக்கூடாது. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசு பூமிக்கு வந்தபோதுஇ அவர் நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருந்தார் மற்றும் சில கட்டளைகளில் புரட்சியை ஏற்படுத்தினார்:<br>2. ஐந்தாவது கட்டளை - உங்கள் தந்தையையும் தாயையும் மதியுங்கள் - மத்தேயு 10: 37 இது குறித்த இயேசுவின் புதிய பார்வையை நமக்குக் காட்டுகிறது.<br>3. ஆறாவது கட்டளை - கொலை செய்ய வேண்டாம். கொலைக்கு இயேசுவின் வரையறையைப் பார்க்க மத்தேயு 5: 21-22 ஐ பாருங்கள். இன்று நாம் மக்களை எவ்வாறு நடத்துகிறோம் என்பதை இது எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கவனியுங்கள்.<br>4. ஏழாவது கட்டளை - விபச்சாரம் செய்ய வேண்டாம். மத்தேயு 5: 28 இயேசுவின் விளக்கத்தைக் காட்டுகிறது.<br>5. எட்டாவது கட்டளை - திருட வேண்டாம். இயேசு இதையும் மறுவரையறை செய்கிறார் (மத்தேயு 5: 40) |
| மீள்பார்வை செய்யுங்கள் | சிறிய குழுக்களில்இ தேவனை விட முக்கிய இடம்பிடிக்கக்கூடிய காரியங்கள் நம் வாழ்க்கையில் இருக்கின்றனவா எனச் சிந்தியுங்கள் | இயேசு பூமிக்கு வந்தபோதுஇ அவர் புரட்சியாளர். இயேசுவின் பிறப்புஇ வாழ்க்கை மற்றும் மரணம் ஆகியவை நியாயப்பிரமாணத்தின் தேவையை எவ்வாறு மாற்றியிருக்கும் என்பதைப் பற்றி விவாதிக்கவும் |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நாம் நல்லவர்களாக இருந்துஇ நம் பெற்றோர்இ ஆசிரியர்கள் போன்றோருக்குக் கீழ்ப்படிந்தால் தேவன் மகிழ்ச்சி அடைவார் என்றும் நமக்கு நித்திய ஜீவன் கிடைக்கும் என்றும் நினைக்கிறோமா? எபேசியர் 2: 8-9 ஐ பாருங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>எல்லா விதிகளையும் கடைபிடிப்பிக்குமளவுக்கு நாம் நல்லவர்களாயிருக்கிறோம் என்று நினைத்து பணக்கார வாலிபனைப் போல இருக்கிறோமா? விதிகளை கடைப்பிடிப்பது நல்லதுஇ ஆனால் அது நமக்கு நித்திய ஜீவனையோ அல்லது தேவனுடனான உறவையோ தராது. |

| | B11 - நிலை 3<br>பாடம் 4 - மோசே<br>தலைப்பு - தேவனுக்கு கீழ்ப்படியாமை | B11 - நிலை 4<br>பாடம் 4 - நியாயப்பிரமாணம்<br>தலைப்பு - "தேவனுடைய வார்த்தை" |
|---|---|---|
| | **தியானப் பகுதி: யாத்திராகமம் 32: 1-26**<br>**முக்கிய வசனம்: யாத்திராகமம் 32: 26**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பின்வாங்கினர்.<br>2. தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு இரக்கம் காட்டினார்இ பின்பற்றாதவர்களுக்கு தண்டனை வழங்கினார். | **தியானப் பகுதி: மாற்கு 7: 1-23**<br>**முக்கிய வசனம்: 1 திமோ 1:15, ரோமர் 5:8**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பரிசேயர்கள் வெளிவேடக்கார்கள்.<br>2. பாரம்பரியங்கள் தேவனுடைய வசனத்தை விட முக்கியமானதாக இருக்கக்கூடாது.<br>3. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களின் இருதயத்தின் தூய்மை குறித்து சவால் விடுத்தார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | ஏதையாவது செய்யக்கூடாது என்று சொல்லப்பட்ட நேரத்தைப் பற்றி மாணவர்களைச் சிந்திக்கச் சொல்லுங்கள். ஆனால் எப்படியாவது அதைச் செய்துவிட்டார்கள்! இதுதான் இங்கே நடந்தது என்பதையும் இஸ்ரவேல் மக்கள் தேவனை மறந்து பொய்யான தெய்வங்களை வணங்கச் சென்றார்கள் என்பதையும் விளக்குங்கள். | நம் குடும்பங்களில் அல்லது தேவாலயத்தில் நம்மிடம் உள்ள பாரம்பரியங்களைப் பற்றி சிந்தியுங்கள். இவற்றில் சில நல்லவையாகவும்இ சில மோசமானவையாகவும் இருக்கலாம். நல்ல மரபுகள் தேவனுடைய வார்த்தையில் கவனத்தை ஈர்க்கின்றனஇ மேலும் அவருக்கு சேவை செய்வதற்கும் கீழ்ப்படிவதற்கும் நம்மைத் தூண்டுகின்றன. ஆனால் அவை ஒருபோதும் தேவனுடைய வார்த்தையை விட முக்கியமானதாக இருக்கக்கூடாது. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. சீனாய் மலையிலிருந்து மோசே திரும்பி வருவார் என்று இஸ்ரவேல் மக்கள் பொறுமையின்றி காத்திருந்தார்கள். எனவே அவர்கள் வணங்குவதற்காக பொய்யான தெய்வங்களை உருவாக்கினார்கள். (32: 1-4) அவர்கள் தங்களால் உருவாக்கவும் கட்டுப்படுத்தவும் கூடிய சொந்த சிலையை உருவாக்க விரும்பினர். அவர்கள் ஏற்கனவே முதல் இரண்டு கட்டளைகளையும் மறந்துவிட்டார்கள். (யாத்திராகமம் 20: 1-5)<br>2. கீழ்ப்படியாமையினாலும் பாவத்தினாலும் முழு தேசத்தையும் அழிக்க தேவன் தயாராக இருந்தார் (32: 10) ஆனால் மோசே இதைச் செய்ய வேண்டாம் என்று தேவனிடம் மன்றாடினான். அனைவரையும் அழிக்காமல் இருப்பதில் தேவன் தனது அன்பையும் கிருபையையும் இங்கே காட்டுகிறார். கிருபையின் வரையறையை விளக்குங்கள் (தகுதியான தண்டனையிலிருந்து விடுபடுவது).<br>3. கர்த்தரைப் பின்பற்றத் தயாராக இருப்பவர்களுக்கு தேவன் கிருபை காட்டினார்இ (32: 26) ஆனால் மற்றவர்கள் கீழ்ப்படியாமையால் கொல்லப்பட்டனர். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசு பூமியில் இருந்தபோதுஇ மோசேக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் வழங்கப்பட்ட நியாயப்பிரமாணம் இன்னும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இருப்பினும்இ எப்படி வாழ்வது என்பது பற்றி பல கூடுதல் சட்டங்களும் விதிகளும் பாரம்பரியத்தால் சேர்க்கப்பட்டனஇ தேவனிடமிருந்து அல்ல.<br>2. பரிசேயர்கள் மிகவும் நியாயத்தீர்ப்பு செய்பவர்கள்இ ஆகவே இயேசுவைச் சோதிக்க வந்திருந்தனர். அவர்கள் இயேசுவின் சீடர்கள் செய்தது தேவனுடைய சட்டங்களை மீறுவதாகக் கூறிஇ அவர்களை விமர்சித்தனர். (மாற்கு 7: 5)<br>3. பரிசேயர்கள் வெளிவேடக்காரர்கள். அவர்களுடைய செயல்கள் அவர்களின் இதயங்களிலிருந்து வரவில்லைஇ அனைவரும் பார்க்க வேண்டும் என வெளிப்புறமாக இருந்தனஇ இருதயமோ தேவனிடமிருந்து வெகு தொலைவில் இருந்தது. அவர்கள் தவறான காரணங்களுக்காக ஆராதித்தனர்; ஏனென்றால் அவர்கள் புனிதமாக தோன்றவும்இ அந்தஸ்தை அதிகரிக்கவும் விரும்பினர். |
| மீள்பார்வை செய்யுங்கள் | பாடத்தை மீள்பார்வை செய்வதற்கும் அதை முடிக்க உதவுவதற்கும் இன்றைய கதையில் மாணவர்களிடம் வினாடி வினா எழுப்புங்கள். | மாணவர்கள் மாற்கு 7: 21-22 ஐப் பார்த்து பிலிப்பியர் 4: 8 உடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நம் வாழ்வில் எந்த குணாதிசயங்கள் இருக்க வேண்டும்இ இதைப் பற்றி நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்? |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>இஸ்ரவேலர்கள் பாவம் செய்தபோதும் தேவன் அவர்களுக்கு இரக்கம் காட்டியது போலஇ நாம் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் நம்மீதும் கருணை காட்ட முடியும். | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நம்முடைய சொந்த இருதயங்களின் நிலையையும் நம்முடைய சொந்த நோக்கங்களையும் பார்க்காமல் மக்களை விரைவாக தீர்ப்புசெய்வதோ குற்றம் சாட்டவோ கூடாது. |

| | B12 - நிலை 3<br>பாடம் 1 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - தேவ வாக்குத்தத்தங்கள் | B12 - நிலை 4<br>பாடம் 1 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - ஒரு குமாரன் பிறக்கிறார் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: ஏசாயா 9: 1-7; மீகா 5: 2**<br>**முக்கிய வசனம்: ஏசாயா 9: 6**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. உண்மையில் இயேசுவின் பிறப்பு அவர் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கணிக்கப்பட்டது.<br>2. இயேசுவின் பிறப்புக்காக பலர் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.<br>3. இயேசு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாஇ உலகின் ஒளி. | **தியானப் பகுதி: லூக் 1: 26-38, லூக் 2: 1-7**<br>**முக்கிய வசனம்: லூக்கா 1: 35**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இயேசுவின் பிறப்பு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியது.<br>2. மரியாளும் யோசேப்பும் உலகத்திற்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக அவரால் பயன்படுத்தப்பட தயாராக இருந்தனர். |
| அறிமுகப்படுத்-துங்கள் | கர்ப்பிணியாக இருந்த யாரையாவது எப்போதாவது தெரியுமா என்று மாணவர்களிடம் கேளுங்கள். குழந்தை பெறும்வரை பெற்றோர்கள் 9 மாதங்கள் காத்திருப்பது எவ்வளவு நீண்ட காலம் என்று அவர்களுக்கு விளக்குங்கள். இயேசு வருவதைப் பற்றி தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மக்களிடம் கூறியிருந்தார்கள்இ ஆனால் அவர் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. | நாம் எவ்வாறு திட்டங்களை உருவாக்கலாம் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள் - எ.கா. விடுமுறைகள்இ பிறந்தநாள் விழாக்கள்இ திருமணங்கள்இ நண்பர்களைப் பார்க்க. இந்தத் திட்டங்கள் தவறாக நடக்கும்போது அல்லது அவை நாம் நினைத்தவாறு நடக்காதபோது நாம் எப்படி செயல்படுகிறோம் என்பதைக் கவனியுங்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஒரு கால்பந்து போட்டி தொடங்குவதற்கு முன்பு அது எடுக்கும் புள்ளிகளை முன்னுரைக்க முடியாதுஇ அல்லது 40 ஆண்டுகளில் நாம் என்ன செய்வோம் என்று நமக்குத் தெரியாது என்பதைக் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். அதை நாம் கணிக்க முடியாது. ஆயினும் சம்பவங்கள் நடப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இயேசு பூமிக்கு வருவார் என்று ஏசாயாவும் மீகாவும் முன்னுரைத்திருந்தார்கள்.<br>2. ஏசாயா தீர்க்கதரிசி இருளில் இருக்கும் மக்கள் எவ்வளவு காரிருளிலும் பிரகாசிக்கும் ஒரு பெரிய ஒளியைக் காண்பார்கள் என்பதைப் பற்றி பேசுகிறார். இந்தப் பெரிய ஒளி யார் என்பதைக் காண யோவான் 8: 12 ஐ பார்க்கும்படி மாணவர்களிடம் கூறுங்கள்.<br>3. உலகத்திற்கான தேவனுடைய இரட்சிப்பின் சிறந்த திட்டம் எவ்வாறு ஆச்சரியமாக இருந்தது என்பதையும்இ இந்தத் திட்டம் நிறைவேற யூதர்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் காத்திருந்ததையும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். அவர் பிறந்ததைக் காண அவர்களில் பலர் அதுவரை வாழவில்லை. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மரியாளுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று சொல்ல தேவன் கபிரியேல் தேவதூதனை அனுப்பினார். மரியாள் ஒரு கன்னிகை என்பதால் பயப்படுகிறாள்இ இது எப்படி நடக்கும் என்று புரியவில்லை. ஆனால் தேவதூதன் அவளுக்கு உறுதியளித்துஇ அவள் தேவனுடைய கிருபை பெற்றிருப்பதாக சொன்னான். (லூக்கா 1: 26-34)<br>2. என்ன நடக்கிறது என்பதை மரியாள் முழுமையாக புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்இ ஆனால் அவள் தேவனை நம்ப வேண்டும் என்று அவளுக்குத் தெரியும். (1: 38) நம் வாழ்க்கையை எப்போதும் மாற்றியமைக்கும் செய்திகளுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.<br>3. மீகாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்காக இயேசு பெத்லகேமில் பிறந்தார். (மீகா 5: 2) இயேசு தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவது ஏன் மிகவும் முக்கியமானது என்பதைக் கவனியுங்கள்.<br>4. இயேசு பிறக்கும்போதுஇ மரியாள் அவரைத் துணிகளில் போர்த்தி முன்னணையில் வைக்கிறாள். (2: 7) |
| மீள்பார்வை செய்யுங்கள் | ஏசாயா 9: 6 ரூ 7 ஐ மாணவர்களுடன் படித்துஇ ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இயேசுவை விவரிக்கும் ஒவ்வொரு தலைப்புகளையும் பற்றி விவாதிக்கவும். | தங்களை மரியாள் மற்றும் யோசேப்பு என்று கற்பனை செய்ய மாணவர்களிடம் கூறுங்கள். மரியாள் அல்லது யோசேப்பு எழுதுவதைப் போல ஒரு டைரி பதிவை எழுதச் சொல்லுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>மாணவர்களை ஒளியின் சிறப்பியல்புகளை சிந்திக்கச் சொல்லுங்கள்இ மேலும் இயேசுவை எவ்வாறு உலகின் ஒளி என்று அழைக்கலாம் என்பதைப் பற்றி சிந்திக்கச் சொல்லுங்கள். (ஏசாயா 9: 2) | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>மாணவர்கள்இ தங்களுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்களைப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அவற்றை ஏற்றுக்கொள்ள அவர்கள் மரியாளைப் போலவே தயாரா என்பதைக் கவனியுங்கள். |

| | B12 - நிலை 3<br>பாடம் 2 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - மரியாளின் ஆச்சரியம்! | B12 - நிலை 4<br>பாடம் 2 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - மீட்பர் அறிவிக்கப்படுகிறார் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 1: 26-38**<br>**முக்கிய வசனம்: லூக்கா 1: 32**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியதுஇ இது தேவனுடைய இறையாண்மை திட்டத்தின் ஒரு முக்கிய பகுதி என்பதைக் காட்டுகிறது.<br>2. மரியாள் மற்றும் யோசேப்பைப் போலவே நாமும் நம் சொந்தத் திட்டங்களை உருவாக்க முடியும்இ | **தியானப் பகுதி: லூக்கா 2: 8-20**<br>**முக்கிய வசனம்: லூக்கா 2: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. மேசியாவாகிய கிறிஸ்துவின் வருகையைப் பற்றி பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் உற்சாகமடைந்தார்கள்.<br>2. மேய்ப்பர்கள் இந்தக் குழந்தை இயேசுவைப் பற்றி தேவதூதர்களிடமிருந்து கேட்டபின் அவரைச் சந்திக்க உற்சாகமாக இருந்தார்கள். |
| அறிமுகப்படுத்-துங்கள் | நாம் எவ்வாறு திட்டங்களை உருவாக்கலாம் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள் எ.கா. விடுமுறைகள்இ பிறந்தநாள் விழாக்கள்இ திருமணங்கள்இ நண்பர்களைப் பார்க்க. இந்தத் திட்டங்கள் தவறாக நடக்கும்போது அல்லது அவை நாம் நினைத்தவாறு நடக்காதபோது நாம் எப்படி செயல்படுகிறோம் என்பதைக் கவனியுங்கள். மரியாளுக்கு யோசேப்பை திருமணம் செய்ய ஒரு திட்டம் எப்படி இருந்தது என்பதைப் பற்றி விவாதிக்கவும். | ஒரு குழந்தையின் பிறப்பு பொதுவாக எவ்வாறு அறிவிக்கப்படுகிறது என்பதைப் பற்றி சிந்தியுங்கள்; ஒருவேளை அவர்களின் பெற்றோரால்இ ஒரு அட்டை அல்லது குழந்தையின் படங்கள் மூலம். இது ஆனந்தமாக மகிழ்ச்சியாக இருக்கிறது. இயேசு எப்படி சாதாரண குழந்தை இல்லை என்பதை விளக்குங்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. தேவன் கபிரியேல் தேவதூதனை மரியாளிடம் அனுப்பிஇ அவள் இன்னும் திருமணமாகாமல் இருந்தபோதும்இ அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று சொல்லச் சொன்னார். (வசனம் 31)<br>2. மரியாள் பதற்றமடைந்து இது எப்படி நடக்கும் என்று புரியாமல் இருந்தபோதுஇ தேவதூதன் அவளுக்கு தேவனிடம் கிருபை கிடைத்ததாகவும்இ தேவனால் அசாத்தியம் ஒன்றுமில்லை என்றும் உறுதியளிக்கிறான். (வசனங்கள் 34-37) இதன் பொருள் என்ன என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.<br>3. மரியாள் கலிலேயாவைச் சேர்ந்தவள்இ யோசேப்பு தாவீதின் தலைமுறையில் வந்தவர் என்ற முக்கியமான உண்மைகளைச் சுட்டிக்காட்டவும். இது ஏன் மிகவும் முக்கியமானது என்று மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்; வரப்போகும் மேசியா கலிலேயாவிலிருந்து வருவார் (ஏசாயா 9: 1) மேலும் அவர் தாவீதின் சந்ததியைச் சேர்ந்தவர் என்று தீர்க்கதரிசிகள் சொன்னார்கள் (ஏசாயா 9: 7). இந்த உண்மைகள் எல்லா தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றும் பெரிய படத்தின் ஒரு பகுதியாக இருந்தன. | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசு பிறந்த இரவுஇ மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளைப் காவல்செய்து கொண்டிருந்தார்கள். பொதுவாக இரவில் ஆடுகள் பாதுகாப்பது அமைதியாக இருக்கும்இ மேய்ப்பர்களோ மிகவும் களைப்புடன் இருப்பார்கள் என்பதை சுட்டிக்காட்டவும். (வசனம் 8)<br>2. ஆனால் இந்த இரவுஇ ஆச்சரியமான ஒன்று நடந்தது! அவர்களுக்கு ஒரு தேவதூதன் தோன்றினான்இ அவர்கள் அனைவரும் பயந்துவிட்டார்கள்! அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்று மாணவர்களிடம் கேளுங்கள். (வசனம் 9)<br>3. பின்னர் இன்னும் தேவதூதர்கள் கூட்டம் தோன்றிஇ கர்த்தராகிய இயேசு பூமிக்கு வந்ததைக் கொண்டாடும் விதமாக தேவனைப் புகழ்ந்து பாடினார்கள். ஆடுகளுடன் இருளில்இ மேய்ப்பர்களுக்கு இந்த காட்சி எவ்வளவு அற்புதமாக இருந்திருக்கும் என்பதை விளக்குங்கள். (வசனங்கள் 13-14)<br>4. இரட்சகராகிய இயேசு பிறந்தார் என்று சொல்ல தேவதூதன் வந்திருந்தான். (வசனம் 11) |
| மீள்பார்வை செய்யுங்கள் | முக்கிய வசனத்தில் காபிரியேல் தேவதூதன் அளிக்கும் வாக்குறுதிகள் அனைத்தையும் பட்டியலிடுங்கள். இந்த வாக்குறுதிகள் இயேசுவைப் பற்றியவை என்று நாம் உண்மையிலேயே நம்புகிறோமா? | இந்த பிறப்பு அறிவிப்பை நீங்கள் எப்படி கற்பனை செய்தீர்கள் என்பதற்கான சுவரொட்டி அல்லது சுவர் காட்சியை உருவாக்கவும். உங்கள் கண்ணோட்டத்தில் தேவதூதன் சொன்னதை சேர்க்கவும். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>1. நம்முடைய வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்களை நாம் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் மரியாளைப் போல ஏற்றுக்கொள்ள நாம் தயாரா?<br>2. மக்கள் இவ்வளவு காலமாக காத்திருந்த இயேசுவுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம்? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>இயேசுவின் கதையைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல மேய்ப்பர்களைப் போல நாம் உற்சாகமாக இருக்கிறோமா? அவருடைய பிறப்பு அவர்களுக்கு அற்புதமானதைப் போலவே உங்களுக்கும் உண்மையில் அற்புதமானது என நினைக்கிறீர்களா? |

| | B12 - நிலை 3<br>பாடம் 3 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - இயேசுவின் பிறப்பு | B12 - நிலை 4<br>பாடம் 3 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - இயேசு வணங்கப்படுகிறார் |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 2: 1-7**<br>**முக்கிய வசனம்: 2 கொரிந்தியர் 8: 9**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. பெத்லகேமில் இயேசுவின் பிறப்பு கிட்டத்தட்ட கவனிக்கப்படவில்லை.<br>2. இயேசுஇ தேவனுடைய குமாரன்இ மெய்யான மனிதர்.<br>3. அவரது பிறப்பு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியது. | **தியானப் பகுதி: மத்தேயு 2: 1-12**<br>**முக்கிய வசனம்: மத்தேயு 2: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. இயேசு பிறந்தபோதுஇ சிலர் அவரை வரவேற்றார்கள்இ மற்றவர்கள் வரவேற்கவில்லை.<br>2. இயேசுஇ மரியாள் மற்றும் யோசேப்பு ஆகியோரை தேவன் பராமரித்துப் பாதுகாப்பாக வைத்திருந்தார். |
| அறிமுகப்படுத்-துங்கள் | உங்கள் ஊருக்கு ஒரு ராஜா அல்லது ராணி வந்தால் அவர்களிடம் எப்படி நடந்துகொள்வீர்கள் என்று மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்; மக்கள் அநேகமாக மிகவும் உற்சாகமாக இருப்பார்கள் மேலும் ஏராளமான பெரிய கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வார்கள்! ஆனால் இயேசு பிறந்தபோது யாருக்கும் தெரியாது. இது கிட்டத்தட்ட கவனிக்கப்படாமல் இருந்தது. சத்திரத்தில் அவருக்கு இடம் கூட இல்லைஇ அவருடைய படுக்கை ஒரு முன்னணையாக இருந்தது. | ஒரு குழந்தை பிறக்கும்போது நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி சிந்திக்க மாணவர்களைக் கேளுங்கள். நாம் எவ்வாறு பரிசுகள் வாங்குகிறோம்இ சென்று பார்க்கிறோம்இ குழந்தையை கையிலெடுக்கிறோம் என்பதைக் கவனியுங்கள். இது கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியான நேரம் என்பதை விளக்குங்கள்! |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. மரியாளும் யோசேப்பும் மக்கள்தொகை கணக்கெடுப்புக்காக நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்குச் செல்ல வேண்டும்; கணக்கிடப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு நிறைமாத கர்ப்பிணிக்கு குறிப்பாக அந்த நாட்களில் இந்த நீண்ட பயணம் எவ்வளவு சோர்வாக இருந்திருக்கும் என்பதைக் கவனியுங்கள். (வசனங்கள் 1-4)<br>2. இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பை அகஸ்டஸ் உத்தரவிட்டார். அகஸ்டஸ் தன் கட்டுப்பாட்டில் எல்லாம் இருப்பதாக நினைத்திருக்கலாம்இ ஆனால் உண்மையில்இ தேவன் தான் கட்டுப்படுத்துபவராக இருந்தார்இ இது அவருடைய நேரம் மற்றும் அவரது திட்டத்தின் ஒரு பகுதியாகும்.<br>3. இது ஒரு ராஜா பிறப்பதற்கான சாதாரண காட்சி அல்லஇ ஆனால் இது கர்த்தராகிய இயேசுவுக்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதைப் பற்றி விவாதிக்கவும். அவர் மரியாளையும் யோசேப்பையும் வழிநடத்தி அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கிக் கொண்டிருந்தார். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. ஞானிகள் கிழக்கிலிருந்து பயணித்துஇ ஒரு புதிய ராஜா பிறக்கிறார் என்பதற்கு அடையாளமான நட்சத்திரத்தைப் பார்த்தார்கள். இந்த ராஜா யார் என்று ஏரோது மன்னனிடம் கேட்டார்கள். (வசனம் 1-2)<br>2. இந்த ராஜாவைக் கண்டுபிடித்துஇ அவரைச் சென்று வணங்கும்படி அவன் ஞானிகளிடம் கூறினான். ஆனால் ஏரோது உண்மையில் குழந்தையை கொல்லத் திட்டமிட்டிருந்தான். (வசனங்கள் 7-8)<br>3. இயேசு பிறந்தபோது ஏரோது ராஜாவாக இருந்தான்.<br>4. ஞானிகள் நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து குழந்தையை அவரது வீட்டில் கண்டார்கள். அவர்கள் வரும்போது அவருக்கு ஒன்று அல்லது இரண்டு வயது இருக்கலாம். அவர்கள் அவரைப் பார்த்தபோதுஇ அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்! அவர்கள் அவரை வணங்கிஇ பொன்இ தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப்போளம் ஆகியவற்றைப் பரிசாக அவருக்கு வழங்கினர். (வசனங்கள் 10-11) |
| மீள்பார்வை செய்யுங்கள் | சிறிய குழுக்களாகஇ இயேசுவின் பிறப்பை அறிவிக்க உள்ளூர் பெத்லகேம் செய்தித்தாளுக்கு ஒரு கட்டுரை எழுதுங்கள். | இன்றைய ஆராய்ச்சியை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக மாணவர்களிடம் வினாடி வினாவை கேளுங்கள்இ மேலும் அவர்களுக்கு உதவும் வகையில் ஆராய்ச்சி 3ஐ இதனோடு சேருங்கள்.. |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரிப்பதற்காக இயேசு மனிதரானார். இதன் மகத்துவத்தை நாம் உண்மையிலேயே புரிந்துகொள்கிறோமா? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>'ஞானமுள்ளவர்கள்' இன்றும் இயேசுவைத் தேடுகிறார்கள்இ வணங்குகிறார்கள்இ அவர்கள் அவரிடமிருந்து பெறக்கூடியவற்றிற்காக அல்லஇ மாறாக ஆனால் அவர் யார் என்பதற்காக. |

| | B12 - நிலை 3<br>பாடம் 4 - கிறிஸ்துமஸ் மகிழ்ச்சி!<br>தலைப்பு - தேவதூதனுடைய செய்தி | B12 - நிலை 4<br>பாடம் 4 - கிறிஸ்துமஸின் அதிசயம்<br>தலைப்பு - இரட்சிப்பு! |
|---|---|---|
| | **தியானப் பகுதி: லூக்கா 2: 8-20**<br>**முக்கிய வசனம்: லூக்கா 2: 11**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் வருகையைப் பற்றி பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் உற்சாகமடைந்தார்கள்.<br>2. மேய்ப்பர்கள் தேவதூதர்களிடமிருந்து கேட்டபின் குழந்தை இயேசுவைச் சந்திக்க உற்சாகமாக இருந்தார்கள். | **தியானப் பகுதி: லூக்கா 2: 25-40**<br>**முக்கிய வசனம்: ஏசாயா 7: 14**<br>**நாம் அறிந்துகொள்வது:**<br>1. குழந்தை இயேசுவின் வருகையைப் பார்த்து மக்கள் பக்திப்பரவசடைந்தனர்.<br>2. இயேசுவுக்கு ஆதரவான எதிரான செயல்கள் இருந்தன. மக்கள் இயேசுவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் அல்லது அவர்கள் அவரை முற்றிலும் நிராகரிப்பார்கள். |
| அறிமுகப்படுத்-துங்கள் | ஒரு குழந்தையின் பிறப்பு பொதுவாக எவ்வாறு அறிவிக்கப்படுகிறது என்பதைப் பற்றி சிந்தியுங்கள்; ஒருவேளை அவர்களின் பெற்றோரால்இ ஒரு அட்டை அல்லது குழந்தையின் படங்கள் மூலம். இது ஆனந்தமாக மகிழ்ச்சியாக இருக்கிறது. இயேசு எப்படி சாதாரண குழந்தை இல்லை என்பதை விளக்குங்கள்இ எனவே அவருடைய பிறப்பு சாதாரண வழியில் அறிவிக்கப்படாது! | ஒரு குழந்தை பிறக்கும்போதுஇ ஒன்பது மாதங்களாக அது வரும் என்று மக்கள் காத்திருப்பதால் மிகுந்த உற்சாகம் ஏற்படுகிறது. இந்த ஆய்வில் நாம் அறிந்துகொள்ளப் போகிறவர்கள் பிறந்த இந்த குழந்தையைச் சந்திக்க தங்கள் வாழ்நாள் முழுவதும் காத்திருந்தார்கள் என்பதை விளக்குங்கள் - அவர் இறுதியாக இந்த பூமியில் பிறந்தார் என்று அவர்கள் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும்! |
| முடியுங்கள் | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. இயேசு பிறந்த இரவுஇ மேய்ப்பர்கள் தங்கள் ஆடுகளைக் காவல்காத்துக் கொண்டிருந்தார்கள். பொதுவாக ஒரு இரவில் ஆடுகளைக் காப்பது அமைதியாக இருக்கும்இ ஆனால் மேய்ப்பர்கள் மிகவும் சோர்வாக இருப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவும். (வசனம் 8)<br>2. ஆனால் இந்த இரவில்இ அவர்களுக்கு ஒரு தேவதூதன் தோன்றினான்இ அவர்கள் அனைவரும் பயந்தார்கள்! அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்று மாணவர்களிடம் கேளுங்கள். (வசனம் 9)<br>3. இரட்சகராகிய இயேசுவைப் பற்றி தேவதூதன் அவர்களுக்குச் சொல்ல வந்திருந்தான். (வசனம் 11)<br>4. பின்னர் இந்த தேவதூதனுடன் இன்னும் அதிகமான தேவதூதர்கள் தோன்றிஇ இயேசு பூமிக்கு வந்ததைக் கொண்டாடி தேவனைப் புகழ்ந்து பாடினார்கள். (வசனங்கள் 13-14) மேய்ப்பர்களுக்கு இந்தக் காட்சி எவ்வளவு அற்புதமாக இருந்திருக்கும் என்பதை விளக்குங்கள்.<br>5. இந்த ஆண் குழந்தையைப் பார்த்த மேய்ப்பர்கள் எவ்வளவு உற்சாகமாக இருந்தார்கள்இ அவர்கள் உடனே அவரைப் பற்றி மக்களிடம் சொல்லத் தொடங்கினர். | **பைபிள் கதையைச் சொல்லுங்கள்**<br>**விவாதித்து விளக்குங்கள்:**<br>1. சிமியோன் தேவனுக்கு பக்தியோடு கீழ்ப்படிந்து விசுவாசித்த ஒரு மனிதர். (வசனம் 25)<br>2. பரிசுத்த ஆவியானவர் சிமியோன் இறப்பதற்கு முன்பு வெகுகாலத்திற்கு முன்பே எதிர்பார்த்திருக்கிற மேசியாவைக் காண்பார் என்று வாக்குறுதி அளித்திருந்தார். (வசனம் 26) சிமியோன் தனது வயதான காலத்தில் எப்படி உணர்ந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்கவும்இ இது நிறைவேறுமா இல்லையா என்று அதிசயித்திருக்கலாம்.<br>3. ஒரு நாள்இ மரியாளும் யோசேப்பும் குழந்தை இயேசுவோடு வந்தபோது சிமியோன் ஆலயத்தில் இருந்தார்.<br>4. லூக்கா 2: 34 ல்இ இந்த பாலன் பலருக்கு மகிழ்ச்சியாக இருப்பார்இ ஆனால் பலர் அவரை எதிர்ப்பார்கள் என்று சிமியோன் கூறினார். இதன் மூலம் சிமியோன் எதைக் குறிக்கிறார் என்பதை ஆராயுங்கள்.<br>5. தீர்க்கதரிசியான அன்னாளும் அந்த நேரத்தில் கோவிலில் இருந்தாள். அவள் எப்போதும் கோவிலில் இருந்துஇ ஜெபம் செய்து உபவாசம் இருந்தாள். (வசனங்கள் 36-37) |
| மீள்பார்வை செய்யுங்கள் | இந்தப் பிறப்பின் அறிவிப்பை நீங்கள் எப்படி கற்பனை செய்தீர்கள் என்பதற்கான சுவரொட்டி அல்லது சுவர் காட்சியை உருவாக்கவும். உங்கள் கண்ணோட்டத்தில் தேவதூதன் சொன்னதை சேர்க்கவும். | மரியாளும் யோசேப்பும் தங்கள் ஆண் குழந்தை மீதான இந்த உற்சாகத்தை மிக அதிகமாக உணர்ந்திருக்க வேண்டும். முக்கிய வசனத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். |
| வாழ்ந்து காட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>இயேசுவின் கதையைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல மேய்ப்பர்களைப் போல நாம் உற்சாகமாக இருக்கிறோமா? அவருடைய பிறப்பு அவர்களுக்கு அற்புதமானதாய் இருந்தது உண்மையே என்று நீங்கள் நினைக்கிறீர்களா? | **இந்தப் பாடம் நமக்கு எவ்வாறு சவாலாய் அமைகிறது:**<br>சிமியோனும் அன்னாளும் தேவனிடத்தில் பக்தியுள்ளவர்களாய் இருந்தார்கள். நாம் நம் வாழ்க்கையை தேவனுக்காக அர்ப்பணிக்கிறோமா? நாம் அவரிடம் ஜெபித்து பைபிள் வாசிக்கிறோமா? |

பாடங்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்

நிலை 3 பாடங்கள்

☐ மாணவர்கள் பைபிளைப் பார்க்காமல் இந்த பாடங்களை முடிக்க முடியாது, மேலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பைபிள் வசனப்பகுதிகளைக் குறிப்பிட வேண்டியிருக்கும்.
☐ கேள்விகள் குறுக்கு சொற்கள் மற்றும் சொல் கட்டங்கள், விடுபட்ட சொற்கள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் உள்ளன.
☐ நமது நோக்கம் என்னவென்றால், அனைத்து மாணவர்களும், அவர்கள் எந்த பைபிளை வைத்திருந்தாலும், கேள்விகளுக்கு பதிலளிக்க முடியும்.
☐ பாடங்கள் முற்றிலும் சரியாக இருக்கும்போது, ஒவ்வொரு வாரமும் 20 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன, அதிகபட்சம் ஒரு மாதத்திற்கு 80 மதிப்பெண்கள்.
☐ நிலை 3 - சுட்டிக்காட்டியபடி பொதுவாக ஒரு பதிலுக்கு 1 மதிப்பெண் அளிக்கவேண்டும்.

நிலை 4 ஆராய்ச்சி

☐ இவை நிலை 3 பாடங்களைக் காட்டிலும் கடினமான பதிப்பாகும்.
☐ மிகவும் சிக்கலான கேள்விகள் மற்றும் பதில்கள் தேவைப்படுகிறது.
☐ பாடங்கள் முற்றிலும் சரியானவையாகவும் மேலும் கேள்விகளுக்கு முழு விடை இருக்கும்போதும், வாரத்திற்கு 20 மதிப்பெண்கள் மற்றும் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள்.

மதிப்பெண் வழங்குவதற்கான குறிப்புகள்

முதலில் இதைச் செய்யுமாறு ஆசிரியர்களைக் கேட்கிறோம்:

☐ ஒவ்வொரு பாடத்தையும் சரிபார்த்து பதில்கள் சரியானதா அல்லது தவறா என்று குறிக்கவும்.
☐ அறிவுறுத்தப்பட்டபடி தேவையான புள்ளிகளை வழங்குங்கள்.
☐ எப்போதும் வெவ்வேறு நிறத்தில் குறிக்கவும், ஒவ்வொரு சரியான பதிலையும் டிக் செய்யவும்.
☐ தேவையான இடங்களில் சரியான பதிலை எழுதுங்கள், எழுத்துப்பிழைகளைச் சரிசெய்யவும், இருப்பினும் இதற்காக எந்த மதிப்பெண்ணும் குறைக்கப்படுவதில்லை.
☐ அரைகுறையான பதில்களுக்கு குறைவான மதிப்பெண்களைக் கொடுங்கள்.
☐ மாதத்தில் பெற்றதை மொத்த மதிப்பெண்களைக் கூட்டி, அதற்கென்று பின் பக்கத்தில் வழங்கப்பட்ட இடத்தில் இதை எழுதவும்.

மிகவும் தாராளமாக இருப்பது அவசியம் மேலும் மாணவர்களை அவர்களின் வேத ஆராய்ச்சியில் ஊக்குவிக்க முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவருக்கு ஊக்கமளிக்கும் வார்த்தையை எழுதுவது உதவியாக இருக்கும், மேலும் இதற்காக இந்தப் பாடத் தாளில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் நல்ல வண்ணந்தீட்டுதல், சுத்தமாக வைத்திருத்தல், பெற்ற மதிப்பெண்கள், பாடத்தைப்பற்றி மாணவரின் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றைப் பற்றி கருத்துகள் கூறலாம்.

கருத்துகளை முடிந்தவரை மாறுபட்டதாக வைக்க முயற்சிக்கிறோம். இதில் கேள்விகள், அறிக்கைகள், கண்டறிந்தவைகள், ஊக்கங்கள் போன்றவை அனைத்தும் இருக்கலாம். இதற்கு சிந்தனை தேவை, ஆனால் மாணவரின் ஆர்வத்தைக் குன்றாமல் வைத்திருப்பது முக்கியம். ஒவ்வொரு மாதமும் அதே அறிக்கை அல்லது கேள்வி மீண்டும் மீண்டும் வருமானால், அது தன் தாக்கத்தை இழக்கிறது.
நிலை 3

பொதுவான கருத்துகள்

“நல்ல வேலை! நீ கேள்விகளை மிகவும் கவனமாகப் படித்திருக்கிறாய். கடைசி கேள்விக்கான உன்பதிலை நான் மிகவும் விரும்பினேன், நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறாய்.”

“ஹாய் ஜொனாதன். உன் கடின உழைப்புக்கு நன்றி. கிட்டத்தட்ட எல்லாவற்றிற்கும் பதிலளிக்க முயற்சித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. விடுபட்டுப் போனவற்றை நான் உனக்காக நிரப்பியிருக்கிறேன்.”

ஆவிக்குரிய கருத்துக்கள்
“மோசே இஸ்ரவேல் மக்களுடன் சில கடினமான நேரங்களைச் சந்தித்தார், ஆனால் எல்லா பிரச்சினைகளையும் தானே தீர்க்க தேவன் அவரை விடவில்லை.”

“தேவனை நேசிக்க தன் தந்தை கற்றுக்கொடுத்ததை யோசேப்பு ஒருபோதும் மறக்கவில்லை. அவன் வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந்தபோதும் இதை நினைவுகூர்ந்தான்.”

“பர்த்திமேயு கர்த்தராகிய இயேசுவிடம் செல்வதில் உறுதியாக இருந்தான். அவன் இப்போது பார்க்க முடிந்ததால் ஏமாற்றமடையவில்லை, கர்த்தராகிய இயேசு மிகவும் சிறப்புவாய்ந்தவர் என்பதை அவன் இப்போது அறிந்துகொண்டான்.”

© Bible Educational Services 2023
www.besweb.com